# கோவலன் குற்றவாளியா?

சிலம்புச்செல்வர்
ம.பொ.சி




இன்பநிலையம்

இன்ப நிலையம்

# கோவலன் குற்றவாளியா?

சிலம்புச் செல்வர்

**ம. பொ. சிவஞானம்**

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4

முதற் பதிப்பு : 9-5-71
இளங்கோ விழா
உரிமை ஆசிரியருக்கு.

விலை ரூ. ஒன்று

அச்சிட்டோர் : ஜீவன் அச்சகம், சென்னை-5.

# முன்னுரை

மக்களிடையே இலக்கிய ஆர்வம் பெருகிவரக் காண்கின்றோம். சின்னஞ்சிறு கிராமத்தில்கூட இலக்கிய விழாவும் பட்டிமன்றமும் நடக்கின்றன. நாளிதழ்-வார இதழ்களிலே இலக்கியத்திற்குத் தனிப்பகுதி ஒதுக்கப்படுகின்றது. நாளிதழ்களின் 'ஞாயிறு மலர்' களிலே, இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளி வருகின்றன. இலக்கிய ஆராய்ச்சி நூல்களும் கணக்கின்றி வந்துகொண்டிருக்கின்றன. பொதுவாகச் சொன்னால், இலக்கியத் துறையில் நல்ல மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இதன் விளைவாக, தமிழ்க் காப்பியங்களுள் தலை சிறந்ததான சிலப்பதிகாரத்தினைப் பயிலுவோர், ஆராய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சிலப்பதிகாரத்தை ஆராய்வோர், காப்பிய நாயகியான கண்ணகியை குணவதியாகக் கொண்டு, அவள் நாயகனான கோவலனைக் குற்றமுடையவனாகக் காண்கின்றனர்.

கோவலனைப்பற்றி ஆராய்வோர் இரண்டு தவறுகளைச் செய்கின்றனர். ஒன்று, அவனே சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைவன் என்று கொள்வதாம். மற்றொன்று, காப்பியந் தோன்றிய காலத்தில் தமிழினத்தார் கடைப்பிடித்த பழக்க வழக்கங்களை மறந்து கோவலன் பாத்திரத்தை ஆராய்வதாம். சிலர், சிலப்பதிகாரத்தில் இங்கொரு காதை அங்கொரு காதை

மட்டுமே படித்துவிட்டு, செய்திகளை அரைகுறையாக ஆராய்ந்து, கோவலனைத் தூற்றுகின்றனர். இத்தகைய ஆராய்ச்சிகளை நேரில் கேட்டபோதும், நூல்களில் படித்தபோதும் என் மனம் பெரிதும் வருந்தியது.

பல்கலைக் கழகப் பட்டதாரிகளைப் பார்த்து, "அணி செய் காவியம் ஆயிரம் கற்கினும், ஆழ்ந்திருக்கும் கவி யுளம் காண்கிலார்" என்று பாடினார் பாரதியார். அது மிக மிகப் பொருத்தமுடையதாகும். ஒரு சொல்லுக்குப் பல பொருளும், பல பொருட்களுக்கு ஒரே சொல்லும் தரும் பெருமை யுடையது தமிழ். இளங்கோவின் சிலம்பும் இதற்கு விலக்கன்று. சொல்லுக்குச் சொல் இந்தப் பெருமைக்குச் சான்றாக விளங்குகின்றது சிலப்பதிகாரம். "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்னும் பாரதியின் சொல்லை வாய்மையுடையதாக்கும் வளமுடையது இளங்கோவின் தமிழ். இந்தச் சிறப்புக் களையெலாம் சிந்தையில் கொண்டு சிலப்பதிகாரத்தை ஆராய்வோர், கோவலனைக் குறையற்றவனாகக் காண் பார்கள். குறை கண்ட விடத்தும் குற்றமற்றவனாக வேனும் கொள்வார்கள். இது உறுதி. கோவலனைப் பற்றி நடத்தப்பட்டுவரும் திறனாய்வை யொட்டி என் கருத்தை விரிவாக வெளியிடவேண்டுமென்று எனக்கு நண்பர்களாக உள்ள புலவர்களிலே சிலர் என்னை வற்புறுத்தி வந்தனர். அவர்கள் விருப்பத்தை இந்நூல் நிறைவேற்றும்.

இதுவரை யான் எழுதிய நூல்களையெலாம் வெளி யிட்டுள்ள இன்பநிலையத்தாரே இந்நூலையும் சிறப்பான முறையில் வெளியிட முன்வந்தது எனக்கு மகிழ்ச்சி யைத் தருகின்றது.

**வாழ்க, இளங்கோவின் புகழ்!**

**சென்னை**
**1-5-71**

**ம. பொ. சிவஞானம்**

# மாதவியைச் சந்திக்கு முன்னர்...

கோவலனைப் பற்றிய திறனாய்வில் ஈடுபடுவதற்கு முன்பு அவனைப் பற்றி சிலப்பதிகாரத்தில் இளங்கோ வடிகள் தரும் செய்திகளை சேகரித்துக் கொள்வோம்.

**கோவலன்,** சோழ நாட்டின் துறைமுகப் பட்டின மும் சோழர் பேரரசின் தலைநகருமான பூம்புகாரில் அரச குடும்பத்தோடு வைத்துப் பேசத்தக்க செல்வமும் புகழுமுடைய **மாசாத்துவான்** என்னும் வாணிகனுடைய மகனாவான். அவன் தந்தையைக் கூறுமிடத்து,

> **''ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி**
> **மாசாத்து வாணிகன்...''**
>
> —சிலம்பு: *20; 57—58.*

என்றும்,

> **''பெருநில முழுதாளும் பெருமகன் தலைவைத்த**
> **ஒருதனிக் குடிகளோடு உயர்ந்தோங்கு செல்வத்தான்**
> **வருநிதி பிறர்க்கார்த்து மாசாத்துவான்...''**
>
> —சிலம்பு: *1; 31—33.*

என்றும் சிறப்பித்துப் பேசுகின்றார் சிலப்பதிகார ஆசிரியர்.

பொருள் மிகுந்த மாசாத்துவானுக்கு மகனாகப் பிறந்த கோவலனும் புகழிற் சிறந்து விளங்கினான் என்பதனை,

> **''அவனுந்தான்,**
> **மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்**
> **பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்**

*1677—1*

**கண்டேத்தும் செவ்வேள்என்று இசைபோக்கிக் காதலான்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பான்''**

—சிலம்பு : *1; 35—39.*

என்ற வருணனையால் அறிவிக்கின்றார் ஆசிரியர் இளங்கோ.

**காமனா, கந்தவேளா ?**

தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்தின் புகழினும் தன்புகழே மிகுந்து விளங்கும்படியாக செயற்கரிய செய்து வாழ்ந்தானும் கோவலன். அழகுக்கும் இளமைக்கும் குமரக் கடவுளோடு கோவலனை ஒப்பிட்டுப் புகழ்கின்றார் சேரமுனி இளங்கோ. ''பண் தேய்த்த மொழியினார். கண்டேத்தும் செவ்வேள்'' என்னும் வாசகமே இதற்குச் சான்று.

கோவலன் பதினாறு வயது நிரம்பாத இளங் காளையாக இருந்தபோது, புகார் நகரத்திலேயே வாழ்ந்த மாநாய்கன் மகள் கண்ணகியை அவனுக்கு மணம் செய்து வைக்கின்றனர் அவனுடைய பெற்றோர். அப்போது அவளுக்கு வயது பன்னிரண்டு.

கோவலன், கண்ணகி நல்லாளுடன் சில ஆண்டுகள் கூடிக்கலந்து இல்வாழ்க்கையில் ஈடுபடுகிறான். கண்ணகியும் கோவலனும் மனமொத்து வாழ்ந்ததனை, காமனும் ரதியும் போல இருவரும் இன்பம் துய்த்ததனை,

**''தூமப் பணிகளொன்றித் தோய்ந்தா லெனவொருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர்போல் நின்று''**

என்னும் வெண்பாவில் கூறுகின்றார். ஆம்; 'மங்கல வாழ்த்துக் காதை'யுள் கோவலனை கந்தவேள்

என்று வருணித்த ஆசிரியர், 'மனையறம்படுத்த காதை'யுள் காமனுடன் ஒப்பிடுகின்றார்.

கோவலனும் கண்ணகியும் புகார் நகரில் முருகனும் வள்ளியும் போல் வாழ்ந்து கொண்டிருந்த நேரத்தில், அதே நகரில், நடனக் கணிகை மாதவி என்பாள், தான் கற்ற நடனக்கலையை சோழ மன்னனுடைய அவையில் அரங்கேற்றி, அரசனிடம் பரிசம் பெற்றாள். அதுகாலை, அவளுக்கு வயது பன்னிரெண்டு. மாதவியாள் கண்ணகியினும் வயதில் குறைந்தவள் என்பதை இங்கு மனத்துள் கொள்ள வேண்டும்.

## முதல் சந்திப்பு

சோழ மன்னன் அவையிலே மாதவியின் நாட்டிய அரங்கேற்றம் நடந்தபோது, கோவலனும் அங்கிருந்ததாக இளங்கோவடிகள் வெளிப்படையாகக் கூற வில்லை. ஆனால், கோவலன் அங்கிருந்தான் என்பதற்குச் சிலப்பதிகாரத்தில் சான்று உண்டு.

சோழ மன்னன் மாதவி நல்லாளுக்குப் பரிசாகத் தந்த பச்சை மாலையை அவளுடைய தோழியான கூனி என்பாள், முச்சந்தி ஒன்றில் நின்று விலைகூறுகின்றாள். அவள் விலை கூறிய இடம் "நகர நம்பியர் திரிதரு மறுகு" என்கின்றார் இளங்கோவடிகள். 'திரிதரு மறுகு' என்றதால், 'தொழில் எதுவுமின்றி, காமக்குறிப்புடன் காளையர் பலர் வழக்கமாகத் திரிகின்ற வீதி' என்று பொருள் கொள்ளலாம். அது, நடனக் கணிகையர் வாழும் வீதியாகத்தானே இருக்க முடியும்!

## கூனியின் சாகசம்!

நகர நம்பியர் திரிகின்ற தெருவில், மாதவிக்குப் பரிசாகக் கிடைத்த பச்சை மாலையை விலைகூறி நின்ற கூனி, விலை கொடுக்கக் காளையர் பலர் முன்வந்தாலும்

அவர்களுக்கு மாலையை விற்க விரும்பாதவளாகி, தான் எதிர்பார்க்கும் காளை வருகின்றவரை மற்றவர்களுக்கு விலைகூறி விற்பாள் போன்ற பாவனையில் நிற்கின்ருள். இதனை, "பகர்வனர் போல்வதோர் பான்மை" என்னும் வாசகத்தால் உணர்த்துகின்ருர் அடிகள்.

பின்னர், கோவலன் வந்து மாலையை வாங்க விலை தந்தபோது, அவனுக்கு மனமுவந்து மாலையை விற்கின்ருள் கூனி. இதனுல், கூனியால் எதிர்பார்க்கப் பட்டவன் கோவலன்தான் என்பதையும், அரசவையில் மாதவி நாட்டிய மாடியபோதே அவன் அங்கு இருந்திருக்கிருன் என்பதையும் நாம் உய்த்துணர வைக்கின்ருர் இளங்கோ.

மாதவியின் முகமறியாத நிலையில், கூனியிடம் பச்சை மாலையை கோவலன் விலைக்கு வாங்கவில்லை. சோழ மன்னன் அவையில் மாதவியின் ஆடல் கண்டு ரசித்து, அவளுடைய பாடல் கேட்டு மகிழ்ந்து, அவளது அழகிலேயும் மயங்கி, பின்னரே பச்சை மாலையை விலைக்கு வாங்கி மாதவியின் மனைபுகுந்தான்.

## காப்பியத்தின் தலைமை கண்ணகிக்கா, கோவலனுக்கா ?

கோவலன் பெருங்காப்பியத்திற்குரிய தலைவனாக இருக்கும் தகுதியுடையவனல்லன் என்பது ஒரு வாதம். இது, காப்பியத்தில் கோவலனுக்குரிய இடத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததன் விளைவாக எழுந்ததாகும். இதனைக் கூறுவோர், காப்பியத்திற்கான அணியிலக்கணங்களைக் கூறும் தண்டியலங்காரத்தை ஆதாரமாகக் கொள்ளுகின்றனர். "பெருங்காப்பியம் தன்னிகரில்லாத் தலைவனைப் பெற்றிருக்க வேண்டும்" என்கிறார், தண்டியாசிரியர்.

தண்டியலங்காரம், "காவிய தரிசனம்" என்னும் வடநூலின் தமிழ் பெயர்ப்பாகும். ஆகவே, அதனைச் சான்றாகக் கொண்டு, தமிழர் பண்பாட்டினடியாகத் தோன்றிய சிலப்பதிகாரத்தை ஆராய்வது முறையாகாது.

இது நிற்க, தண்டியலங்காரம், தான் தோன்றிய காலத்தால் சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்டதாகும். அது காரணமாகவும், தண்டியலங்காரத்தைக்கொண்டு சிலப்பதிகாரத்தை அளக்க முயல்வது ஆராய்ச்சிக்குரிய நெறியாகாது.

**எச்சரிக்கை !**

சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார், தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலை அறிவார். தம்முடைய உரையில் பல இடங்களில் தண்டியலங்கார சூத்திரங்களை உவமை காட்டியிருக்கிறார். ஆனால், அவரும், சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து முடிவுகாண தண்டியலங்காரம் பயன்படாதென்று

சொல்லாமல் சொல்லுகிறார். சிலப்பதிகார உரைப் பாயிரத்துள்,

> "இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளை அடிகள் செய்கின்ற காலத்து இயற்றமிழ் நூல் தொல்காப்பிய மாதலானும், பிறர் கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணத்தன வாத லானும், அந்நூலின் முடிவே இதற்கு முடிபென் றுணர்க."

என்கிறார், அடியார்க்கு நல்லார். இது, ஆராய்ச்சி யாளர்க்கு அவர் தந்துள்ள எச்சரிக்கையாகும். தண்டி யலங்காரத்தைக் கொண்டு சிலப்பதிகாரத்தை அளக்க லாகாதென்பதற்கு இன்னொரு சான்றும் கூறுவோம்.

தண்டியாசிரியர், "நாற்பொருள் பயக்கும் நெறி யுடையதே பெருங்காப்பியம்" என்கிறார். நாற்பொருள், அறம்—பொருள்—இன்பம்—வீடு என்பனவாம். இந்த நான்கில் ஒன்று குறைந்தால் பெருங்காப்பியம் ஆகா தென்பதனை உணர்த்துவான் வேண்டி,

> **"அறமுதல் நான்கினும்**
> **குறைபாடுடையது**
> **காப்பியமென்று கருதப் படுமே"**

என்கின்றார் தண்டியார்.

இதன் பொருள், "அறம்—பொருள்—இன்பம்— வீடு ஆகிய நான்கனுள் ஒன்று குறைந்த நிலையில் காப்பியம் அமைந்திருப்பின், அது பெருங்காப்பிய மாகாது; சிறு காப்பியமே" என்பதாகும்.

### வீடு கூறாததேன் ?

சிலப்பதிகாரம், அறம்—பொருள்—இன்பம் ஆகிய மூன்றினை மட்டுமே கொண்டிருக்கிறது. அதில், வீடு

வெளிப்படக் கூறப்படவில்லை. இதற்கு விளக்கம் தரும் அடியார்க்கு நல்லார்,

" உலகத்துக் காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும் வீடுங் கூறல் வேண்டு மன்றே ; இந்நாடகக் காப்பியத்தினுள் அறனும் பொருளும் இன்பமுங் கூறிச் சிறிதாயினும் வீடு கூறிற்றிலர் ; என்னை யெனின்,...மணிமேகலை துறந்தாள் என்பதுணர்ந்து அத்துறவினைப் பின் வைத்து அதனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி அடிகள் சாத்தனுர்க்கு இவ்வுரையை உரைத்துழி, அவர் மணிமேகலை பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும் பயப்ப ஒரு காப்பியஞ் செய்தமைத் தனமெனக் கேட்டு அவ்வடிகள் விரும்பி இவ்விரண் டினையும் ஒரு காப்பியமாக்கி உலகின்கண் நடாத்துவான் வேண்டவும் இருவர் செய்தலின், இரண்டாகி நடந்தன வென்க. "

*[உரைப்பாயிரம்]*

என்கின்ருர்- ஆம் ; சிலப்பதிகார ஆசிரியர் வீடு பேறு கூருது விடுத்ததனை ஒரு குறையாகக் கருதி, அதனை அகற்றிடக் கருதியவர்போல, ஏதேதோ காரணங் கற் பிக்கின்ருர். இதற்கு மறுப்புரைக்கின் 'மற்ருென்று விரித்தல்' என்னும் குற்றம் நேருமாதலின், அதனை விடுத்து விஷயத்திற்கு வருவோம்.

பெருங்காப்பியமான சிலப்பதிகாரத்தில் துறவு கூறப்படவில்லை யென்பது, அடியார்க்கு நல்லார் உரை யாலும் உறுதிப் படுவதால், சிலப்பதிகாரத்தின் தகுதியை அளக்க தண்டியலங்காரம் பயன்படா தென்றறிக.

தகுதியுடையவனோ ?

சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலைமை கண்ணகிக்கே உரிய தென்பதனையும்; கோவலன் காப்பியத் தலைவிக்கு வாய்த்த தலைவனே என்பதனையும் மீண்டு மொருமுறை நினைவில் கொள்ள வேண்டும். காப்பியத் தலைவியின் கணவனும் காப்பியத்தின் தலைவனாக மதிக்கப்படுவது இலக்கியமரபன்று. இதனை நினைவில் கொண்டால், கோவலன், சிலப்பதிகாரக் காப்பியத் தலைவிக்கு வாய்த்த தலைவனாவதன்றி, காப்பியத் தலைவனாகான் என்பதனை எளிதில் உணரலாம்.

சிலப்பதிகாரத் தலைமை கண்ணகிக்கே உரிய தென்பதற்கு அக்காப்பியத்துள்ளிருந்தே சான்றுகள் காட்டுவோம்.

கண்ணகியினுடைய கால் அணியை நினைப்பூட்டும் பொருட்டே, "சிலப்பதிகாரம்" என்னும் பெயரைக் காப்பியத்திற்குச் சூட்டியிருக்கிறார் இளங்கோவடிகள். இதனாலும், காப்பியத் தலைமை கண்ணகிக்கே உரிய தென்பதை உணர்கின்றோம்.

காப்பியத்தின் நடுவிலுள்ள மதுரைக் காண்டத் துள்—'கொலைக்களக் காதை'யோடு, கோவலனின் மண்ணுலக வாழ்வு முடிந்து விடுகின்றது. அதற்கு மேல், அமரர்க்கரசன் தமருடன் வந்து அவன் கண்ணகிக்குக் காட்சியளிப்பதையும் எடுத்துக் கொண்டால், மதுரைக் காண்டத்தின் இறுதியிலுள்ள 'கட்டுரை காதை'யோடு கோவலன் மறைந்து விடுகிறான். அதற்கப்பாலுள்ள வஞ்சிக் காண்டம் கோவலனையும் ஒரு பாத்திரமாகக் கொண்டிருக்க வில்லை. ஆகவே, கதை முழுவதிலும் நடமாடாத கோவலனை காப்பியத்தின் தலைவனாகக் கொள்ளுவதற்கில்லை.

## தலைமை கண்ணகிக்கே!

கண்ணகியின் நிலை வேறு. அவள், காப்பியத்தின் துவக்கத்திலுள்ள 'மங்கல வாழ்த்துப் பாடல்' தொடங்கி, இறுதியிலுள்ள 'வரந்தரு காதை' வரை மானுட வடிவிலும் தெய்வ வடிவிலும் காட்சியளிக்கிறாள். இதர பாத்திரங்களோடு உரையாடுகின்றாள். ஆம்; 'கட்டுரை காதை'யின் இறுதியில் அவள் விண்ணக மாந்தர்க்கு விருந்தாகின்றாள் என்றாலும், அதற்கு மேலும் அவள் இல்லாமல் கதை இல்லை என்ற அளவுக்கு தெய்வ வடிவில் காப்பியத்தின் பாத்திரமாகிறாள். இதனாலும், காப்பியத் தலைமை கண்ணகிக்கே உரியதாகிறது.

'மங்கல வாழ்த்துப் பாடலுள், கண்ணகி—கோவலரை மணமக்களாக அறிமுகப்படுத்துங்கால்,

"மாகவான் நிகர்வண்கை
 மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள்
 ஈராறுண்டு அகவையாள்;

அவளுந்தான்,

போதிலார் திருவினாள்
 புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின்
 திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த
 வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும்
 கண்ணகி......"

—சிலம்பு : 1; 23—29.

என்னும் வரிகளில், முதலில் கண்ணகியை—காப்பியத் தலைவியை அறிமுகப்படுத்துகின்றார். பின்னரே,

" வருநிதி பிறர்க்கார்த்து
மாசாத்துவான் என்பான்
இருநிதிக் கிழவன்மகன்
ஈரெட்டாண்டு அகவையான்;

அவனுந்தான்,

மண்தேய்த்த புகழினன்
மதிமுக மடவார்தம்
பண்தேய்த்த மொழியினர்
ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்தும் செவ்வேள் என்று
இசை போக்கிக் காதலாற்
கொண்டேத்தும் கிழமையான்
கோவலன்......"

—சிலம்பு : *1; 33–39.*

என்று, காப்பியத் தலைவிக்குத் தலைவனாக விருக்கும் கோவலனை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார் ஆசிரியர். இந்த வைப்பு முறைக்கு விளக்கந் தரும் அரும் பதவுரைகாரர், " இவளை முன் கூறிற்று ; கதைக்கு நாயகியாதலின் " என்கின்றார். இதனால், காப்பியத் தலைமை கண்ணகிக்கே உரிய தென்பதை ஐயந்திரிபற அறிகின்றோம்.

## தலைவியின் தலைவனே !

" கோவலன், காப்பியத் தலைவன் அல்லனாயினும், காப்பியத் தலைவிக்குரிய தலைவனாக இருக்கும் தகுதி யேனும் பெற்றவனா?" என்றால், அந்தத் தகுதியை முழு அளவில் பெற்றவன் என்று தயக்கமின்றிக் கூறலாம்.

சிலப்பதிகாரம், கண்ணகியைத் தலைவியாகக் கொண்ட காப்பியம். அந்தக் காப்பியத் தலைவிக்கு வாய்த்த தலைவனே கோவலன். காப்பிய நாயகியான கண்ணகிக்குத் தலைவனாக இருக்கும் தகுதிகூட கோவல னுக்கு இல்லை என்று கூறுவோருமுண்டு. இது, ஆழ்ந்

திருக்கும் கவியுளம் காணுத கருத்தாகும். இளங்கோ வடிகள் எல்லாவகையிலும் காப்பிய தலேவிக்குத் தலே வனுக இருக்கும் தகுதி கோவலனுக்குண்டென்பதைக் காப்பியத்தின் பல்வேறிடங்களில் எடுத்துக் காட்டி யுள்ளார்.

## வள்ளியும் கந்தனும்

"குன்றக் குரவை"யுள், ஒரு முலே இழந்த கோலத்துடன் மலேவேங்கையின் கீழ் நின்ற கண்ணகியைப் பார்த்த குன்றக் குறவர்கள், "எம்குலத்து வள்ளி போல்வீர்" என்று கூறி, அவளேத் தொழுது வழிபடுகின்றனர்.

'மங்கல வாழ்த்துக் காதை'யுள், புகார் நகர மகளிர் பலர் கூடும் பொதுவிடங்களிலே, "கண்டேத்தும் செவ்வேள்"—அதாவது, "கண்ணுரக் கண்டு, தலேயார வணங்கி, கையாரத் தொழத் தக்க முருகன் போன்றவன்" என்று போற்றப் படுகின்ருன் கோவலன்.

இதனுல், கண்ணகி நல்லாள் வள்ளிநாயகியானுல், அந்த வள்ளிக்குரிய முருகனுவான் கோவலன் என்பதனேப் புலப்படுத்துகின்ருர் இளங்கோ.

## குணவதியும் குணவானும்

'நாடுகாண் காதை'யுள், பாண்டி நாடு செல்லும் பொருட்டு புகார் நகரைக் கடந்த கண்ணகியும் கோவலனும் நகருக்கு வெளியே சமணத்துறவியான கவுந்தியடிகளேச் சந்திக்கின்றனர். அவர்களேக் கண்ட கவுந்தியடிகள்,

**"உருவும் குலனும் உயர்பே ரொழுக்கமும்**
**பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்**
**உடையீர்..."**

சிலம்பு : *10; 46—48.*

என்று கூறுகின்றார். ஆம் ; கண்ணகியும் கோவலனும் உயர் குலத்தைக் காட்டும் பொலிவும், ஒழுக்கத்தைப் புலப்படுத்தும் பண்பாடும், அருக தேவனை இடையறாது நினைந்து ஏத்தும் பக்தியும் உடையவர்க்ளாகக் கவுந்தியடிகளின் கண்களுக்குக் காட்சியளிக்கின்றனர்.

இதனால், தோற்றத்திலும் பண்பிலும் நடத்தையிலும் கண்ணகியோடு ஒப்பிட்டுச் சொல்லும்படியாக கோவலன் விளங்கினான் என்பது புலப்படும். முதன்முறையாகக் கண்ட நிலையிலேயே எல்லா வகையாலும், கண்ணகி தேவிக்கு உரிய கணவனாகக் கவுந்தியடிகளின் கண்களுக்குக் காட்சியளிக்கிறான் கோவலன்.

## ரதியும் மதனும்

'நாடுகாண் காதை'யுள், மதுரை செல்லும் வழியில் எதிர்ப்படும் வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும் கூட, "காமனும் தேவியும்" என்றே கோவலனையும் கண்ணகியையும் வருணிக்கின்றனர். கண்ணகி ரதிக்கு ஒப்பானவளென்றால், அந்த ரதிக்குரிய மன்மதனாக இருக்கும் தகுதி கோவலனுக்கு உண்டென்பதை உணர்த்துகின்றார் இளங்கோ.

## பின்னையும் கண்ணனும்

'கொலைக்களக் காதை'யுள், தன்னுடைய விருந்தினராக வந்துள்ள கண்ணகியையும் கோவலனையும் ஒருசேரவைத்துக் கண்ட இடைக்குல மகளான மாதரியும் அவள் மகள் ஐயை என்பாளும்,

> "ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த
> பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
> நல்லமு துண்ணும் நம்பி ஈங்குப்
> பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்

தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்என
ஐயையும் தவ்வையும் விம்மித மெய்திக்
கண்கொளா நமக்கிவர் காட்சி..."

சிலம்பு: 16; 46—53.

என்ற வியந்துகூறி மகிழ்ந்தனர் என்கிறார் இளங்கோவடிகள். இதனால், கண்ணகி நல்லாள், பின்னைப் பிராட்டி ஆவாளானால், அந்தப் பிராட்டியாருக்குரிய கண்ணபெருமானாக விளங்கும் தகுதி கோவலனுக்குண்டென்பதை செந்தமிழ்ச் சுவைநனி சொட்டச் சொட்டக் கூறுகின்றார் இளங்கோ.

## சொர்க்கத்திலும் கண்ணகியுடன்

மதுரைக் காண்டத்தின் இறுதியிலே, அமரர்க்கரசன் தமர்வந்து, கற்புத் தெய்வமாம் கண்ணகி நல்லாளைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். இன்றைய புலவர் சிலரால் குற்றவாளியாகக் கருதப்படும் கோவலன் மட்டும் நரகத்திற்குச் சென்றானா?—இல்லை. கண்ணகியை அழைக்க அமரர்க்கரசனின் தமர் சேரநாட்டின் பகுதியான செங்குன்றம் வந்த காலை, அவர்களுடன் சேர்ந்து வருகின்றான் கோவலன். இதனை உணர்த்த,

"அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்
கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வான ஊர்தி ஏறினள் மாதோ
கானமர் புரிகுழல் கண்ணகி..."

—சிலம்பு: 23; 197—200.

என்று பாடுகின்றார் இளங்கோவடிகள். இதனால், கண்ணகி தேவியார் சொர்க்கத்திற்குச் செல்லும் புண்ணியவதியானால், அந்தச் சொர்க்கத்திலும் அவளோடு சேர்ந்திருக்கும் தகுதி கோவலனுக்கு உண்

டென்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றார் இளங்கோவடிகள்.

## திங்களும் ஞாயிறும்

'மனையறம் படுத்த காதை'யுள், திருமணத்திற்குப் பிறகு முதல் நாள் இரவில் பள்ளியறையுள் அமர்ந்திருக்கும் மணமக்களை வருணிக்கும் இளங்கோவடிகள்,

> "முதிர்கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
> கதிர்ஒருங் கிருந்த காட்சி போல"
>
> —சிலம்பு : *2; 30—31.*

என்கிறார். ஆம்; கண்ணகியைச் சந்திரனோடும், கோவலனைச் சூரியனோடும் ஒப்பிட்டு, மதியும் ஞாயிறும் அருகருகே இருந்தாற்போல கண்ணகியும் கோவலனும் பள்ளி அறையுள் அமர்ந்திருந்தனர் என்கிறார். இந்த இடத்திலும் கண்ணகியோடு கோவலனை சமநிலையில் வைத்து வருணித்திருக்கிறார் கவிஞர்.

## இளங்கோவைப் பழிப்பதா?

இதுகாறும் காட்டிய சான்றுகளால் காப்பியம் செய்த மகா கவியான இளங்கோவடிகளின் கருத்திலே, காப்பிய நாயகிக்கு உரிய இலக்கணப்படி, தன்னேரில்லாத் தலைவியான கண்ணகி தேவிக்குத் தலைவனாக இருக்கும் தகுதிகள் அனைத்தையும் படைத்தவன் கோவலன் என்பதை அறிகிறோம்.

கண்ணகியையும் கோவலனையும் படைத்துக் காட்டிய காப்பியப் புலவன் கருத்து இதுவானால், அதனை மறுக்கும் வகையில் கோவலனைக் குற்றவாளியாக, காப்பியத் தலைவிக்குரிய தலைவனாக இருக்கும் தகுதியற்றவனாக வருணிக்க நமக்கேது உரிமை? உரிமை உண்டென்றால், அது மகாகவி இளங்கோவின் பாத்திரப் படைப்பையே பழிப்பதாகும்.

காப்பியம் தந்த கவிஞன் கருத்து ஒருபுற மிருக்கட்டும். கதைப்போக்கின்படியேனும் "கோவலன் குற்றவாளியா ?" என்பதனை ஆராய்ந்து உண்மை அறிய முயல்வோம்.

## முதல் இரவில்

கண்ணகி—கோவலன் திருமணத்திற்குப் பிறகு மணமக்கள் இருவரும் முதல் நாளிரவில் பள்ளி அறையில் சந்திக்கின்றனர். அங்கு கோவலன், கண்ணகியின் ஒளிபொருந்திய அழகிய நெற்றியை சிவபெருமான் சடா முடியிலுள்ள பிறைச் சந்திரனோடும், அவளுடைய கண்களை கந்தப் பெருமான் கையிலுள்ள கூர்பொருந்திய வேலாயுதத்தோடும், புருவங்களை காமதேவனின் கையிலுள்ள கரும்பு வில்லோடும், உறுதியான இடையை இந்திரனுடைய வஜ்ராயுதத்தோடும் ஒப்பிட்டுப் புகழ்கின்றான்"

"குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்,
உரிதின் நின்னோடு உடன்பிறப் புண்மையிற்
பெரியோன் தருக திருநுதல் ஆகென;

அடையார் முனையகத்து அமர்மேம் படுநர்க்குப்
படைவழங் குவதோர் பண்புண்டு; ஆகலின்,
உருவி லாளன் ஒருபெருங் கருப்புவில்
இருகரும் புருவ மாக வீக்க;

மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலில்,
தேவர் கோமான் தெய்வக் காவல்
படைநினக் களிக்கஅதன் இடை நினக்கு இடையென;

அறுமுக வொருவனோர் பெருமுறை யின்றியும்,
இறுமுறை காணும் இயல்பினின் அன்றே

அஞ்சுடர் நெடுவேல் ஒன்றுநின் முகத்துச்
செங்கடை மழைக்கண் இரண்டா வீத்தது''

சிலம்பு : 2; 48—52.

இத்துடன் அமையாமல், கண்ணகியின் நல்லியல் புகழைக் கோவலன் மேலும் வருணிக்கின்றான்.

''மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தல் தையால் நின்னை''

சிலம்பு : 2; 73—80.

என்றெல்லாம் மதிமயங்கி மனங்குளிர வருணிக்கின்றான் மாசாத்துவான் மகன் கோவலன்.

### மாதவி மனையில்...

சோழ மன்னன் அவையிலே மாதவியின் ஆடல்—பாடல் — அழகுகளைக் கண்டு மகிழ்ந்த கோவலன் மன்னன் தந்த பச்சை மாலையை ஆயிரத்தெட்டு கழஞ்சு பொன் கொடுத்து வாங்கி மாதவியின் மனைபுகுகிறான். புகுந்தவன், அவள் தந்த மையலிலே கண்ணகியை மறந்தான்.

இந்த நிகழ்ச்சிகளைக் காட்டி, "கோவலன் சபல புத்தி படைத்தவன்" என்று கூறுகின்றனர். இங்கு இலக்கிய மரபு ஒன்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

### இலக்கிய மரபே!

பொருளிலக்கணம் ஆடவர்க்குக் கூறும் பல பிரிவு களிலே "பரத்தையிற் பிரிவு" ஒன்றாகும். இந்த

இலக்கணப்படித்தான் கண்ணகியைப் பிரிந்து மாதவியின் மனையில் தங்கினன் கோவலன்.

சிலப்பதிகாரக் காலம்வரை பரத்தையுடன் கூடி வாழ்வது செல்வப் பெருக்குடைய வணிகருக்குரிய சிறப்பாகக் கருதப் பட்டது. அகநானூறு, கலித்தொகை போன்ற வாழ்க்கை நெறிகளைக் கூறும் இலக்கியங்களிலே பாட்டுடைத் தலைவன் பரத்தையுடன் கூடி வாழ்வதையும் பார்க்கிறோம். ஒரு சில பாடல்களில் தலைவனுடைய பரத்தமையை தலைவி வெறுக்கிருள்—ஆயினும், சமுதாயம் பழிக்கக்கூடிய குற்றமாக அது கருதப்படவில்லை. பரத்தையுடன் வாழ்வோன் பாட்டுடைத் தலைவனுக இருக்கலா மென்ருல், காப்பியத் தலைவிக்குரிய தலைவனுக இருப்பதில் என்ன குற்றமோ?

தொல்காப்பியர் தந்த ஐந்திணை இலக்கணத்தையும் அதன் வழிவந்த அகப்பொருள் இலக்கிய மரபுகளையும் நன்கு அறிந்தவராதலால் கோவலன் மாதவியின் மனைபுகுந்ததைக் குற்றமுடைய செயலாகக் கூறவில்லை இளங்கோவடிகள். ஆனல் அந்நாளைய செல்வர்கள் பத்தினியை அடியோடு மறந்து, பரத்தையின் வீட்டில் தங்கியதாக இலக்கிய மரபு இல்லை. இதற்கு மாருக, மாதவி மனை புகுந்த கோவலன் கண்ணகியை அடியோடு மறந்தவனுகி விட்டான். இதனை,

**''மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
**கோவலன் வாங்கிக் கூனி தன்னெடு**
**மணமனை புக்கு, மாதவி தன்னேடு**
**அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி**
**விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்**
**வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்து...''**

—சிலம்பு: *3; 170—175.*

என்ற வரிகளில் குறிப்பிடுகின்ருர் இளங்கோவடிகள்.

## கண்ணகியைப் பிரிந்தது வினையாலா ?

'கானல் வரி' யுள் ஊடல் காரணமாக, கோவலன் தான் பல்லாண்டுகள் கூடி வாழ்ந்த மாதவியை விட்டுப் பிரியுங்கால்,

**''யாழிசைமேல் வைத்துத்தன்**
**ஊழ்வினைவந் துருத்த தாகலின்**
**உவவுற்ற திங்கள் முகத்தாளைக்**
**கவவுக்கை ஞெகிழ்ந்தனன்''**

சிலம்பு: 7; 55—56.

என்கிறார் இளங்கோவடிகள்.

இப்படி, மாதவியைப் பிரிந்ததற்கு ஊழ்வினையைக் காரணமாக்கும் அடிகள், கண்ணகியைப் பிரிந்ததற்கு ஊழ்வினை காரணமென்று கூறவில்லை. ஏனெனில், அந்தக் காலத்தில் ''பரத்தையிற் பிரிவு'' சமுதாய நியதியாக —குடும்பத் தலைவனுக்குரிய 'நீதி'யாக இருந்ததுதான். இதனாற்றான், மாதவியின் மனை புகுந்த செய்கையை கோவலன் செய்த குற்றமாகக் கூறவில்லை இளங்கோ. '' விடுதலறியா விருப்பினன் ஆயினன் '' என்று மட்டுமே குறிப்பிட்டார். ஆம்; பரத்தையின் வீட்டுக்கும் பத்தினியின் வீட்டுக்கும் போக்குவரத்தா யிருக்கும் இலக்கிய மரபுக்கு மாறாக, '' விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்'' என்கிறார். மாதவிக்கும் கண்ணகிக்குமுள்ள வேற்றுமையைச் சுட்டிக் காட்டு வார்போல், '' வடு நீங்கு சிறப்பினதன் மனையகம் மறந்தான் '' என்கிறார் கவிஞர். இதனால், வடுவற்ற பத்தினியிடம் கூடி வாழ்ந்து இல்லறங்கள் நடத்துவதும், வடுவுடைய பரத்தையிடம் இன்பம் துய்ப்பதும் அந்நாளில் வணிகர்க்குரிய நியதிகளாக இருந்ததனை நினைப்பூட்டுகின்றார்.

## குற்றவாளிக் கூண்டில்...

கோவலன் மாதவியின் மனை புகுந்ததே குற்றமென்றால், அந்தக் குற்றத்திற்கு அவன் மட்டும் பொறுப்பாகமாட்டான். தொல்காப்பியர் தந்த பொருளிலக்கணத்தையும் சேர்த்து அகப் பொருள் இலக்கியங்கள் தந்த புலவர் குலம் முழுவதையுமே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தியாக வேண்டும்.

கோவலன் மாதவியின் மனைபுகுந்தது, சமுதாய நியதி. கண்ணகியை மறந்தது, அவன் வாழ்க்கையில் வெளிப்பட்ட ஒரு பெருங்குறை.

## கலையா, காமமா?

கோவலன், நடனக்கணிகை மாதவியின் மனைபுகுந்ததற்குக் காமவெறியே காரணம் என்கின்றனர் சிலர். இதற்குச் சான்றாக, கண்ணகிதேவி ஒரு அப்பாவிப் பெண் என்றும்; அவள், கோவலனுக்கு ஊடலின்பம் தரவில்லை; "ஊடுதல் காமத்திற்கு இன்பம்" என்று வள்ளுவர் கூறியபடி, ஊடலின்பத்தோடு கூடிய காமத்தைக் கண்ணகியிடம் கோவலன் பெறவில்லை என்றும் கூறுகின்றனர். சிலப்பதிகாரக் காப்பியத்தை நுணுகி ஆராய்ந்தால், இந்த வாதம் உண்மைக்கு மாறானதென்பது புலப்படும்.

கண்ணகி கற்புடைய பெண்ணாயினும், தன் கணவனின் ஐம்புலன்களுக்கும் விருந்தளிக்கும் காதலியாகவும் இருந்திருக்கிறாள். திருமணத்திற்குப் பிறகு முதல் இரவில் பள்ளியறையுள் இருந்தகாலை கண்ணகி நல்லாளை வாய்மணக்க வருணிக்கின்றான் கோவலன். அங்கம் அங்கமாக வருணிக்கின்றான். அவளுடைய நெற்றி, கண், புருவம், இடை ஆகிய உறுப்புக்கள் தெய்வாம்சம் பொருந்தியவை என்று கூறிப் போற்றுகின்றான். இதனால், தோற்றக்காலேயே தன் காதல

னுடைய ஐம்புலன்களையும் கவர்ந்து அவனுடைய உணர்வுகட்கு விருந்தளித்தாள் கண்ணகி என்பது புலனாகிறது. பள்ளியறையில் கோவலனுடன் கண்ணகி பேசியதாகச் சிலப்பதிகாரத்தில் செய்தியில்லை. இதனால், கண்ணகி ஊடலின்பம் தரவில்லை என்று கொள்வதற்கில்லை.

> **கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்**
> **என்ன பயனு மில**

என்று, காமத்துப் பால்—களவியலில் கூறுகின்றார் வள்ளுவர். ஆகவே, பள்ளியறையில் கோவலன் பேசியும் கண்ணகி பேசாதது குறையாகாது. அது சிற்றின்ப வாழ்க்கைக்கு ஒத்ததே. மேலும், "கண்ணகி" என்னும் சொல்லுக்கு "கண்ணால் நகுபவள்" என்றும் பொருள் கூறப்படுகிறது. இதனாலும், மாசாத்துவான் மகன் வாயால் பேசினான்! மாநாய்கன் மகள் கண்ணால் பேசினாள் என்று கொள்ளலாம்.

## காமனும் ரதியும்

கோவலனும் கண்ணகியும் -கணவனும் மனைவியு மாகச் சில ஆண்டுகளே இல்வாழ்க்கை நடத்தினர். ஆனால், பல ஆண்டுகளுக்குரிய இன்பங்களையெல்லாம் அந்தச் சில ஆண்டுகளிலேயே துய்த்தனர் என்கின்றார் இளங்கோ. இதனை,

> **"தூமப் பணிகள்ஒன்றித் தோய்ந்தால் எனஒருவார்**
> **காமர் மனைவிஎனக் கைகலந்து—நாமந்**
> **தொலையாத இன்பமெலாம் துன்னினர், மண்மேல்**
> **நிலையாமை கண்டவர்போல் நின்று"**

என்ற வெண்பாவால் அறிகிறோம். இதன்பொருள்:

**" சினத்தையுடைய பாம்புகள் ஒன்றை யொன்று தழுவிப் பிரியாது கிடந்தாற் போலவும், காமனும் ரதியும் கை**

> கலந்து தழுவி மகிழ்ந்தாற்போலவும், இன்பங்கள் எத்தனை உண்டோ அத்தனையையும் அனுபவித்து, கருத்தொரு மித்துக் கலந்து வாழ்ந்தனர் கண்ணகியும் மாதவியும்.''

என்பதாம். "மண்மேல் நிலையாமை கண்டவர்போல், தொலையாத இன்பமெலாம் துன்னினூர்" என்றதனால், ஒரு பிறவிக்குரிய புணர்ச்சி இன்பங்கள் அனைத்தையும் சில ஆண்டுகளிலேயே துய்த்தனர் என்று அறிகிறோம். காமனும் ரதியும் போல வாழ்ந்தனர் என்றும் அறிவிக்கின்றார் இளங்கோ. காமனுக்கு வாய்த்த ரதி அப் பாவிப் பெண்ணா? காமனுக்கு ஊடலின்பம் தரத் தவறியவளா?—இல்லை. புணர்ச்சி இன்பத்திலும் கோவலனுக்கு மனநிறைவு தந்தாள் கண்ணகி என்பதனை நினைவூட்டத்தான், மன்மதனுக்கு வாய்த்த ரதியோடு கோவலன் மணந்த கண்ணகியை ஒப்பிடுகின்றார் இளங்கோ. ஆகவே, புணர்ச்சி இன்பத்தில் கண்ணகியிடம் மனநிறைவு பெற முடியாத காரணத்தால் கோவலன் மாதவி இல்லம் சென்றான் என்று கூறுவது பொருந்தாக் கூற்றாகும். புணர்ச்சி இன்பத்தில் மட்டுமின்றி, இல்வாழ்க்கைக் குரிய பிற அறங்களையும் குறைவறப் பேணும் திறமை பெற்றிருந்தாள் கண்ணகி. கண்ணகியின் பார்ப்பனத் தோழியான தேவந்தி,

> "சோமகுண்டம் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
> காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு
> தாமின் புறுவர் உலகத்துத் தையலார்
> போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர் யாமொருநாள்
> ஆடுதும்......" —[சிலம்பு : 9; 59-63]

என்று கூறியபோது, "அது என் கற்புக்குப் பெருமை தருவதன்று" என்றுகூறி காமனை வழிபட மறுத்தாள் கண்ணகி. இதனால், அறமறியாத, கற்புத் திறமறியாத அப்பாவித்தனம் கண்ணகியிடம் இல்லை என்பது புலனாகிறது.

## அப்பாவிப் பெண்ணா ?

கனாத்திற முரைத்த காதையில் தேவந்தியிடம் தான் கண்ட கனவைக் கூறுமிடத்து, காதலனைக் கைப் பிடித்து தான் மதுரை நகர் சென்றதையும்; அங்கு காத லனுக்குத் தீங்கு நேர்ந்ததையும், பின்னர் நாடாளும் மன்னனை நாடி தான் வழக்குரைத்ததையும் கூறியவள், மேலும்,

காவலனோடு
ஊர்க்குற்ற தீங்குமொன்று
உண்டால் உரையாடேன்
தீக்குற்றம் போலும் செறிதொடீஇ..." —[சிலம்பு:9; 50-52]

என்றும் கூறுகின்றாள். ஆம், தான் பின்னால் மதுரை யைத் தீக்கிரையாக்கப் போவதை முன் கூட்டியே கனவு கண்ட கண்ணகி, அதனைச் சொல்லத் தயங்கு கிறாள். "ஊரைத் தீக்கிரையாக்கும் கொடுமையை நினைக்கவே அவள் நெஞ்சு நடுங்குகிறது. சொல்ல நா தயங்குகிறது. அச்செயல் "தீக்குற்றம்" என்றும் கூறுகின்றாள். உள்ளப் பண்புடைய ஒருத்திக்குத் தானே இத்தகைய உயரிய உணர்ச்சி தோன்றும். இப்படிப்பட்டவளையா அப்பாவிப் பெண்ணென்று கூறுவது? இன்னும், கணவனும் தானுமாக சொர்க்கம் புகுந்ததாகவும் கனவு கண்டதைத் தேவந்தியிடம் கூறுமிடத்து,

—தீக்குற்றம்
"உற்றேனொடு உற்ற உறுவனோடியானுற்ற
நற்றிறம் கேட்கின் நகையாகும்" —[சிலம்பு ; 9; 52-54.]

என்றாள் கண்ணகி. ஆம்; காதலரிருவர் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் புகுவதென்ற செய்தி சிரிப்பைத் தருகிறது கண்ணகி தேவிக்கு! இதனால், அறிவுக்குப் பொருந்தாததை ஏற்கும் அறியாமை கண்ணகியிடம்

இல்லையென்பதை அறிகிறோம். இந்த அறிவுக் கொழுந் தையா அப்பாவிப் பெண்ணென்பது?

கணவனைப் பிரிந்து மாமன் மாமியிடம் கண்ணகி வாழ்ந்த நாட்களில் அம்முதியோர் கண்ணகிக் குற்ற தனித்துயர் கண்டு கலங்கினர். அவர்தம் கலக்கம் நீக்க தான் புன்முறுவல் காட்டிப் பொய் மகிழ்ச்சியை வெளிப் படுத்தியதாக, மாதரி மனையில் கோவலனிடம் கூறுகின்றாள் கண்ணகி. இந்த நிகழ்ச்சி கண்ணகியின் பண்பட்ட மனத்தைக் காட்டும் படிமமாகும். இத் தகை உயர்ந்த பண்பாடுடையவளை அப்பாவிப் பெண் என்று எப்படிச் சொல்ல முடியும்?

## குறைகளைக் கொட்டினாள் !

மாதவியைப் பிரிந்த கோவலன் தன் மனையை நாடி வந்தபோது, பெரிய புராணத்தில் வரும் திருநீலகண் டரின் மனைவியைப் போல, "எம்மைத் தீண்டாதே" என்று சூளுரைக்கவில்லை கண்ணகி.

பல ஆண்டுகள் பிரிந்திருந்த கணவன் தன்னை யடைந்து,

> ''சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
> குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
> இலம்பாடு நாணுத்தரும் எனக்கு'' —[சிலம்பு : 9; 69-71]

என்று கூறியபோது,

> ''நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்
> சிலம்புள கொண்ம்'' —[சிலம்பு : 9; 72-73.]

என்று கூறினாள். இதனால், காதலன் தனக்கிழைத்த கொடுமைகளை உணரும் திறனற்றவள் என்று எண்ணி விடுவதற்கில்லை. கொலைக்களக் காதையில்—இடைக்குல மாதரியின் இல்லத்தில், "எழுக என எழுந்தாய் என்

செய்தனை" என்று கண்ணகியின் தியாக உணர்வினைக் கோவலன் வியந்து கூறியபோது,

"போற்ரு வொழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கையே ஞுதலின்
ஏற்றெழுந் தனன் யாண்" —[சிலம்பு:16; 81-83]

என்று கூறி, கணவன்பால் தனக்கிருந்த மனக் குறைகளைக் கொட்டி யளக்கிருள் கண்ணகி.

"கோவலன் மாதவி மனையில் தங்கியிருந்தபோது அங்கு சென்று அவனை அழைத்துவரக் கண்ணகி முயன்றிருக்கலாமே"என்று இலக்கிய நயமறியாத சிலர் எழுதுகின்றனர். அப்படி அழைத்து வந்திருந்தால் சிலப்பதிகாரம் கிடைத்திருக்காதே!

இதுகாறும் கூறியவற்ருல், கண்ணகியிடம் இன்பம் பெறத் தவறியதாலோ, அவள் வாழ்க்கை அறங்களுக்குத் துணைபுரியாத அப்பாவிப் பெண் என்பதாலோ, கோவலன் அவளை விட்டுப் பிரியவில்லை என்பதை அறியலாம்.

## கண்ணகியை மறந்ததேன் ?

"கோவலன் மாதவியின் இல்லம் சென்றதற்குக் காரணம் ஊழ்வினையா ?" என்ருல், "இல்லை" என்று விடையளிக்கிருர் இளங்கோ. கோவலன், மாதவியைப் பிரிந்தபோது "யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்தது" என்றும், அவன் கண்ணகியோடு மதுரை செல்லப் புறப்பட்டபோது, "வினை கடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல் கனைசுடர் கால்சீயா முன்" என்றும் கூறுகின்ருர். இப்படி, கதையின் ஒவ்வொரு திருப்பத்திற்கும் பாத்திரங்களின் ஊழ்வினையைக் காரணமாகக் கூறும் இளங்கோவடிகள், கதையின் முதல் திருப்பமாக உள்ள கோவலன் கண்ணகியைப் பிரிந்த நிகழ்ச்சிக்கு மட்டும் வினையைக் காரண

மாகக் கூறவில்லை என்பது நினைவிற் கொள்ளத்தக்க தாகும்.

கோவலன் சிறந்த கலைஞன். கலா ரசிகன். யாழ் இசைத்துப் பாடுவதில் வல்லவன். முத்தமிழ்க் கலைகளைக் கற்றுத் தேர்ந்த வித்தகன். இந்தக் கலையுணர்வுக்கு விருந்தாக அமைந்தாள் நடனக் கணிகையான மாதவி. வேண்டுமானால், கோவலனின் கலையார்வத்தில் பங்கு கொள்ளும் திறமை கண்ணகிக்கு இல்லாததனால் அவன் மாதவி மனைபுகுந்தான் என்று சொல்லலாம். இதுகூட, கோவலனுடைய குறையோ குற்றமோ ஆகாது. அக்கால கலைஞர்களுக்குரிய பழக்கத்தையொட்டிய சாதாரண நிகழ்ச்சியாகவே இதனைக் கருத வேண்டும்.

இங்கொரு வினா எழுவது இயற்கை. "கலையார்வம் காரணமாக கோவலன் மாதவி மனை புகுந்தது சரி; அதனால் கண்ணகியை மறக்க வேண்டுமா?"—என்று கேட்கலாம்.

## காமவெறியல்ல! கலைவெறியே!

கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியின் மனையில் தங்கியதற்கு உண்மையான காரணம்—முதற்காரணம், அவனுடைய எல்லையற்ற கலை உணர்வு தான்! வணிக மகனாயினும், தென்சொற் கடந்தான்; வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான் கோவலன். ஆம்; இளங்கோ தந்த காப்பியத்தின் தலைவிக்கு வாய்த்த தலைவன், இருமொழிப் புலவன்!

கோவலன் இயற்றமிழில் வல்லவன் என்பதை, அவன் மதுரை செல்லும் வழியில், கவுசிகன் மூலம் மாதவி அவனுக்கனுப்பிய கடிதத்தை, அடித்தல் திருத்தலின்றி அப்படியே தன் தந்தைக்கு அனுப்பியதால்,

அறியலாம். அவன் இயற்றமிழ்ப் புலவனாக இருந்தா லொழிய இதைச் செய்திருக்க முடியாது!

மாதவியின் காதலன் யாழ் இசைத்துப் பாடவல்ல இசைவாணன். 'கானல் வரி'யில், தன் கையிலுள்ள யாழைக் கோவலன் கையில் தந்து, "தங்கள் பாணி யாது?" என்று மாதவி கேட்ட போது, "அவனும் காவிரியை நோக்கினவும், கடற்கானல் வரிப்பாணியும் பாடினான்" என்கின்றார் இளங்கோ. மேலும், மதுரையை நோக்கி பாலை நிலத்தில் தன் பத்தினியுடன் செல்லும் கோவலன், அங்கு காட்சி தந்த பாணர்களுடன் சேர்ந்து கொண்டு, அவர்களிடமிருந்த செங்கோட்டு யாழினை வாங்கி, அதனைச் செம்மைப்படுத்தி, பாலைநிலத் தெய்வமான கொற்றவையின் பாடலுக்குரிய பண்ணை இசைத்துப் பாடினான். இதனால் எல்லையற்ற துன்பச் சூழலில் இருந்த போதும் இசையின்பத்தைத் துய்க்க கோவலன் தவறவில்லை என்பதை உணர்கிறோம். இசைக் கலையில் அவன் பெற்றிருந்த புலமைக்கும் ஆர்வத்திற்கும் இதைவிட வேறென்ன சான்று வேண்டும்.

கோவலன், நாடக ரசிகனுமாவான். நாட்டியக் கலை, நாடகத்தின் ஒரு அங்கமாகும். நாட்டியத்தி லிருந்து தான் நாடகக்கலை பிறந்ததெனலாம். மாதவியையும் கோவலனையும் பிணைத்த பெருஞ்சக்தி நாட்டியக் கலை தானே! இதுவன்றி, 'வேட்டுவ வரி'யுள் மதுரை செல்லும் வழியில் ஐயைக் கோட்டமொன்றின் அருகில் தங்கி அங்கு வேட்டுவர் நிகழ்த்தும் கொற்றவை வழிபாட்டுக் கூத்தினைக் கண்டு மகிழ்கின்றான் கோவலன்.

சுருங்கச் சொன்னால், கோவலன் முத்தமிழ்க் கலைஞன். அத்துடன் அமையாது, வடமொழிக் கவிதைகளைப் படித்துப் பொருளறியுமளவுக்கு அம்மொழியில் புலமை பெற்றிருந்தான் என்றும் அறிகின்றோம்.

## இருமொழிப் புலவன்

மாதவியிடத்துத் தனக்குப் பிறந்த மணிமேகலைச் செல்வியைத் தொட்டிலிலிடும் நன்னாளில் தன்னிடம் தானம் பெற வந்த அந்தண முதியோன் மதயானையின் துதிக்கையில் அகப்பட்டு அலறியபோது, அவனைக் காக்கும் பொருட்டு, "ஒய்" என்று ஒலி எழுப்பி, அந்த மத யானையை அடக்கினான் கோவலன்.

"ஒய்" என்பது, யானைப் பாகர் ஒலிக்கும் வடமொழிச் சொல்லாகும். இதற்குப் பொருளுரைத்த அடியார்க்கு நல்லார், "அவனை (அந்தணனை) நெருங்காதொழி" என்று கோவலன் கூறியதாகக் குறிப்பிடுகின்றார். அவரே, "ஒய்" என்பது "யானைப் பாகர் வையும் ஆரிய மொழி" என்றும் குறிப்பிடுகின்றார்.

கோவலன் வடமொழி பயின்றவன் என்பதற்கு மற்றொரு தெளிவான சான்றும் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.

தீர்த்த யாத்திரைக்காக வடதிசை நோக்கிப் புறப் பட்ட அந்தணன் ஒருவன், தான் வாழ வழி சொல்லு மாறு வேண்டிய மனைவிக்கு, வடமொழி வாசகம் எழு திய ஏடொன்றைக் கையில் கொடுத்து, "இதனை, கடமையறிந்த மாந்தர் கையில் கொடுப்பாயாக" என்று சொல்லிவிட்டுப் போனான். அந்த ஏட்டைப் புகார் நகரிலுள்ள வணிகர் மனைதோறும் சென்று காட்டியும், அதனை வாங்கிப் படித்துப் பொருளறிவாரின்றி அந்தப் பார்ப்பினி வருந்துகையில், அந்த ஏட்டை அவளிட மிருந்து வாங்கி, வடமொழி வாசகத்தின் பொருள் அறிந்து "அஞ்சேல், உந்தன் அருந்துயர் களைவேன்; நெஞ்சுறு துயரம் நீங்குக" என்றான் கோவலன்.

இதில் வரும் "வடமொழி வாசகம்" என்னும் சொல்லுக்கு "வடமொழி—ஆரியம்; வாசகம்—கவி"

என்று பொருள் விளக்கம் தந்ததோடு, அந்த வட மொழிக் கவிதையையும் தமது பதிப்பில் எடுத்துக் காட்டியுள்ளார் சிலப்பதிகாரப் பதிப்பாசிரியரான டாக்டர் உ. வே. சாமிநாதய்யர்.

இதனால், கோவலன், வடமொழிக் கவிதைகளையும் எளிதில் படித்துப் பொருளறிந்து கொள்ளுமளவிற்கு அம்மொழியில் புலமை பெற்றிருந்தான் என்று அறிகிறோம்.

கோவலன், முத்தமிழ்க் கலைஞன்—வடமொழிப் புலவன்—வணிகர் குடிச் செல்வன். ஆதலால், ஆடல் பாடல்—அழகு என்ற மூன்றையும் பெற்றிருந்த கலையரசியான மாதவியைக் காதலித்ததில் புதுமை எதுவும் இல்லை; நம்மால் புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால், கற்பரசியான கண்ணகியைக் கனவிலும் நினையாமல் மறந்தானே, அதுதான் புதுமை. பரத்தையின்பம் துய்ப்போர், பத்தினியை மறக்க வேண்டும் என்ற நியதி இல்லை; இன்பத்துக்குப் பரத்தையும் இல்லறக் கடமைகளுக்காகப் பத்தினியும் எனக் கொண்டு இங்குமங்குமாக போக்குவரத்து செய்வது வழக்கம். இந்த வழக்கத்திற்கு மாறாக, கோவலன், கண்ணகியையே மறந்து வஞ்கி, மாதவியிடம் அடைக்கலம் புகுந்தானே, அதற்குக் காரணம் என்ன ?

## வந்து வந்து போகலாமே!

கோவலன் மாதவியின் மனைபுகுந்ததற்கான காரணம் வேறு; கண்ணகியை மறந்ததற்கான காரணம் வேறு. இதனைப் புரிந்து கொள்ளாதவர்களே கோவலனை காம வெறியனாகக் காண்கின்றனர்.

அச்சம்—மடம்—நாணம்—பயிர்ப்பு என்னும் நால் வகைப் பண்புகளை மதில்களாக்கி அவற்றிற்குள்ளே

மறைந்து வாழ்ந்தாள் கண்ணகி. அவளுக்கு அழகு உண்டு; ஆனால், ஆடத் தெரியாது. பாடவும் தெரியாது. காளைக்கேற்ற கன்னிதான்! ஆனால், கலைஞனுக்கேற்ற காதலியாக கண்ணகி இல்லை. அதனால் தான்—கோவலன், அழகோடு, ஆடல் பாடல் கலைகளையும் பெற்றிருந்த மாதவியை நாடினான் என்கின்றனர் சிலர். இதனை நாம் மறுக்கத் தேவையில்லை; ஏற்கலாம். ஆனால், இந்த வாதப்படிப் பார்த்தாலும், கோவலன் கண்ணகியை மறக்க வேண்டிய அவசியமில்லையே! இல்லற நெறிகளைக் குறைவறப் புரியும் பொருட்டு கண்ணகியின் இல்லத்திற்கும் அவன் வந்து போயிருக்கலாமே! சங்க இலங்கியங்களில் வரும் தலைவர்கள் பத்தினியை மறந்து பரத்தை இல்லத்தையே 'சிறை' யாக்கிக் கொண்டதாகச் செய்தியில்லையே! ஆகவே, கண்ணகி ஆடவும் பாடவும் தெரிந்து வைத்தில்லாததால், கோவலன் அவளை மறந்தானென்ற கூற்று பொருந்தாது.

## பத்தினிக்குரிய ஒழுக்கம்

உண்மை என்னவென்றால், மாதவி நல்லாள், ஏனைய நடன மகளிர்போ லல்லாமல், ஒழுக்கத்திற் சிறந்தவளாகவும் விளங்கினாள் என்பதுதான். நகர நம்பியர் திரிதரு தெருவில் மாதவியின் தோழியான கூனி விலைகூறிய பச்சை மாலையை வாங்கிய கோவலன், வெறும் சிற்றின்பத்தை மட்டும் நாடியவனாக இருந்தால், ஒரு இரவு மாதவியிடம் இன்பம் அனுபவித்த பின்னர், மறுநாள் காலை கண்ணகியின் வீடு திரும்பி யிருப்பான். அப்படித் திரும்பாததற்குக் காரணம், மாதவி ஆடல் பாடல் கலைகளில் வல்லவளாக இருந்ததுதான். இதனால் ஒரு இரவுக்கு அதிகமாக மாதவி மனையில் முகாம் போட்டான் கோவலன். சில இரவுகளுக்குப் பிறகேனும் இல்லறக் கடமைகளுக்காக

கண்ணகியின் நினைவு அவனுக்கு வந்திருக்க வேண் டும். ஊடலும் கூடலும், பாட்டும் கூத்தும் பழகப் பழகப் புளித்திருக்க வேண்டும் அல்லவா? அப்படிக் கின்றி, பல ஆண்டுகள் கண்ணகியை மறந்தவனுகி விட்டான் கோவலன். ஆம்; ஊடல் பாட்டு கூத்து ஆகியவையன்றி, மாதவியிடமிருந்த வேறு ஏதோ ஒரு திறம் கோவலன் கண்ணகியை மறக்கும்படி செய்திருக் கிறது. அந்தத் திறம் எது? அதுதான் மாதவியிட மிருந்த பத்தினிக்குரிய ஒழுக்கம். பரத்தையர் குலத் தில் பிறந்தவளாயினும் குணத்திலே அவள் தன் குல ஒழுக்கத்திற்கு விலக்கானவளா யிருந்தாள்.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்........" —[சிலம்பு: 16; 71-73]

என்னும் வரிகளிலே, ஒரு தலைவனும் தலைவியும் கூடி நடத்தும் இல்வாழ்க்கைக்குரிய அறங்கள் என்கின்றுர் இளங்கோ. கண்ணகியைத் துறந்த கோவலன் குடும் பத் தலைவனுக்குரிய அறங்களையும் துறந்தானில்லை, அந்த அறங்களை மாதவியுடன் கூடிக் குறைவற நடத் தினுன். விலைமகளின் வலையில் விழுந்த வேறெவரும் இந்தச் சீரிய வாழ்க்கையை நடத்தியதாக இலக்கியம் எதிலும் செய்தியில்லை. சுருங்கச் சொன்னுல், கண்ணகி யின் ஊடலும் கூடலும் ஒழுக்கமும் உயர்குணங்களும் மாதவி யிடமும் இருந்தன. கண்ணகியிடம் இல்லாத ஆடலும் பாடலும் மாதவியிடம் அதிகப்படியாகக் கிடைத்தன. அதனுல், கண்ண கியை மறந்தவனுனன் கோவலன்.

## சித்திராபதி எங்கே ?

மாதவியின் ஒழுக்கத்திற்குக் கேடு வரக்கூடாது என்பதற்காகவே அவள் தாய் சித்திராபதியை சிலப்பதி காரக் காப்பியத்தில் இளங்கோவடிகள் நடமாட விட

வில்லை. ஆம்; சித்திராபதியின் குணக்கேடுகளை, அவள் குலத்துக்குரிய சேட்டைகளை "மணிமேகலை"யில் பார்க்கிறோம். சிலப்பதிகாரக் காப்பியத்தில் சித்திராபதி என்ற பெயர்கூட இடம் பெறவில்லை. 'மணிமேகலை'க் காப்பியத்திலே சித்திராபதி தன் பேத்தியைப் படுத்தும் பாட்டைப் பார்த்த பிறகு, சிலப்பதிகாரத்தில் இருந்திருந்தால் ஒழுக்கமுள்ள மாதவியை-இருமனப் பெண்டிர் குலத்தில் பிறந்திருந்தும் ஒருவனையே மனத்திற்கொண்டு வாழும் உத்தமியை-நாம் கண்டிருக்கவே முடியாது.

மாதவியின் இல்லத்தில் தங்கியிருந்த கோவலன், கூடல்—ஆடல்—பாடல்களிலேயே காலங்கழித்தான் என்று எண்ணுவதற்கில்லை. அவற்றோடு ஒரு குடும்பத் தலைவனுக்குரிய அறங்கள் பலவற்றையும் நிறைவேற்றினான் என்பதற்கு சிலப்பதிகாரத்தில் சான்றுகள் நிறைய உண்டு.

மாதவி இல்லத்தில் கோவலன் வாழ்ந்தகாலை, அவன் நிறைவேற்றிய இல்லறக் கடன்களை, நாட்டு மக்கள் நலன் கருதும் நற்பணிகளை, தீரத்துடன் புரிந்த தியாகச் செயல்களை மாடல மறையோன் மூலம் நமக்கு உணர்த்தி வைக்கின்றார் இளங்கோவடிகள்.

கோவலன் கொலையாகப் போகும் தருணத்தில், அவனுடைய பழைய சாதனைகளைப் பட்டியல் தொகுத்துத் தருகிறார் இளங்கோ. 'அடைக்கலக் காதை'யுள், தன் அரிய நண்பன் கோவலனைச் சந்திக்கும் மாடல மறையோன்,

**"மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தனள் எடுத்து
வாலாமை நாள் நீங்கிய பின்னர்
மாமுது கணிகையர் மாதவி மகட்கு**

நாம நல்லுரை நாட்டுதும் என்று
அணிமே கலையார் ஆயிரங் கணிகையர்
மணிமே கலையென வாழ்த்திய ஞான்று;
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன்மாரி செங்கையில் பொழிய''
—சிலம்பு: 15; 22-26; 38-41]

என்னும் வரிகளில், மாதவியுடன் கூடிக் கோவலன் நடத்திய இல்லற வாழ்க்கையில், பெண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்ததையும், அம்மகவுக்கு தன் குலத் தெய்வ மான மணிமேகலா தெய்வத்தின் பெயரிட்டதையும், பெயர்சூட்டு விழாவுக்கு வந்தோர்க்கெல்லாம் பொற் காசுகளை அள்ளி வழங்கியதையும் சுவைபடக் கூறு கின்ருன்.

## மாதவி குலமகளே !

கோவலன் மணிமேகலையைப் பெற்றெடுத்தது பரத்தையர் குலத்திற் பிறந்த நடனக் கணிகையான மாதவியின் மூலமாகத்தான். ஆனால், அந்தச் சேய்க் குத் தன் குலதெய்வத்தின் பெயரைச் சூட்டுகின்ருன். இதனால், மாதவியைத் தன் குலத்தவளாகவே கருதி, குலத்திற்குரிய ஒழுக்கங்களையும் கடைப்பிடித்து அவ ளுடன் வாழ்ந்தான் என்பதை நமக்கு நினைப்பூட்டுகின் ருர் இளங்கோ.

இன்னும், புகார் நகரிலுள்ள அந்தணனெருவன் தன் மனைவிக்குத் தந்த வடமொழி வாசகத்தைப் படித் தறிந்து, அவள் வாழ்வாங்கு வாழப்பொருள் கொடுத்த செய்தியையும் மாடலன் கூறுகின்ருன். அப்படிக் கூறுபவன்,

''ஒத்துடை அந்தணர் உரைநூல் கிடக்கையின்
தீத்திறம் புரிந்தோள் செய்துயர் நீங்கத்

தானம் செய்தவள் தன்துயர் நீக்கி
கானம் போன கணவனைக் கூட்டி,
ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து,
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ''

—சிலம்பு: 15; 70–75.

என்று கோவலனுக்குப் பாராட்டுரையும் வழங்குகின்றான். மேலும்,

''பத்தினி யொருத்தி படிற்றுறை யெய்த;
மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
அறியாக் கரிபொய்த்து, அறைந்துணும் பூதத்துக்
கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு,
கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி,
'என்னுயிர் கொண்டுஈங்கு இவன்உயிர் தா'-என''

—சிலம்பு: 15; 76–82.

என்னும் வரிகளில், பத்தினி ஒருத்தியின் மீது பழிசுமத்திப் பொய் கூறியவனைப் பூம்புகார் நகரிலுள்ள பூதம் புடைத்துண்ண முயன்றபோது, அவனை ஈன்ற தாய் கோவலனிடம் சென்று, ''பூதத்திடமிருந்து என் பிள்ளையை மீட்டுத் தா'' எனக் கதறி அழ, கோவலனும், ''என்னுயிரை எடுத்துக்கொண்டு முதியோள் மகனுடைய உயிரைத் தா'' என்று பூதத்தைக் கேட்டதாக, மாடல மறையோன் கோவலனிடமே கூறுகின்றான். இவ்வளவையும் கூறிய மாடலன்,

''இம்மைச் செயதன யானறி நல்வினை;
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்து, இத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது,
விருத்தகோ பால! நீ?......'' [சிலம்பு: 15; 91–94.]

என்னும் வரிகளில், ''கோவல! யானறிய இப்பிறப்பில் நீ செய்தன வெல்லாம் நல்வினையன்றி, தீவினை

இல்லை. அப்படிப்பட்ட உத்தம குணத்தினனாகிய நீ பத்தினியுடன் நாடு பெயர்ந்து தனித்துயர் உறுவது முற்பிறப்பில் செய்த தீவினை போலும்" என்கின்றான்.

மாடலன் மூலமாக இளங்கோவடிகள் நமக்குணர்த்தும் உண்மை என்னவென்றால், ஒரு பத்தினியுடன் கூடி வாழ்வோன் கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகள் அனைத்தையும் மாதவியுடன் கூடிவாழ்ந்த காலத்தில் கோவலன் கடைப்பிடித்தான் என்பதுதான்.

ஆம்; கண்ணகியிடம் இல்லாத ஆடல்—பாடல்களை மாதவியிடம் அனுபவித்தான் கோவலன். கண்ணகியிடம் இருந்த அழகு, ஒழுக்கம், உயர் குணங்கள் ஆகியவற்றையும் மாதவியிடம் கண்டனன். அதனால், கண்ணகியை மறந்தவனானான்.

## காம வெறியா, கலை வெறியா ?

கோவலன்மீது "காமுகன்," "சபல புத்தி படைத்தவன்" என்றெல்லாம் குற்றஞ் சாட்டுவோர், சிலப்பதிகாரத்திலிருந்து மேலும் மூன்று விதமான சான்றுகளை எடுத்துக் காட்டுகின்றனர். அந்த மூன்றில் ஒவ்வொன்றையும் எடுத்து ஆராய்ந்து, அவர்கள் கொண்ட முடிவு தவறு என்று காட்ட முடியும்.

பூம்புகாரில் தொடர்ந்தாற்போல் இருபத்தெட்டு நாட்கள் இந்திர விழா நடைபெறுகின்றது. செல்வச் செழிப்புடைய நகரமாதலால், மக்கள் எல்லோருமே களிப்பில் ஆழ்ந்திருக்கின்றனர். கன்னியரும் காளையருமான காதலர்கள், இணை இணையாக புகார் நகர வீதிகளில் உலாவி, விழாக்கோலம் காண்கின்றனர். அப்படிச் சுற்றுவோர், தத்தம் பருவத்துக்கும் பண்புக்கும் ஏற்ப உரையாடிச் செல்கின்றனர்.

அவர்களிலே சிலர் காதல் மொழிகளையும் பேசுகின்றனர். அவர்கள் மத்தியிலே மாதவியின் காதலன் கோவலனும் காணப்படுகின்றான். இனிய இளவேனிற் காலமாதலால், பொதிய மலையிலிருந்து புறப்பட்ட தென்றற் காற்றும் புகார்நகர வீதிகளிலே கோவலனைப் போல உலாப் போகின்றது.

## பரத்தரோடா, பரத்தையரோடா?

புகார் நகரின் விழாக் கோலத்தை விளக்கப்புகுந்த இளங்கோவடிகள், தென்றற் காற்றைக் கோவலனுக்கு உவமைப்படுத்துகின்றார்.

> **''குரல்வாய்ப் பாணரொடு, நகரப் பரத்தரொடு,**
> **திரிதரு மரபின் கோவலன் போல,**
> **இளிவாய் வண்டினொடு, இன்இள வேனிலொடு,**
> **மலய மாருதம் திரிதரு மறுகில்...''**
>
> —சிலம்பு : 5; 200-203.

என்பது இளங்கோவின் வாக்கு. இதில் வாய்ப்பாட்டிசைக்கும் பாணர்களோடும், புகார் நகரத்துப் பரத்தர்களோடும் இந்திர விழா நாட்களில் புகார் நகர வீதிகளில் உலாப்போகிறான் கோவலன் என்னும் செய்தி கிடைக்கிறது. பரத்தரொடு திரிகிறானதலால் கோவலன் காமுகனும்!

கோவலன் வாழ்வது பரத்தையர்கள் நிறைந்த வீதியிலுள்ள மாதவியின் இல்லத்தில்! அதனை, ''நகர நம்பியர் திரிதரு தெரு'' என்று 'அரங்கேற்று காதை'யிலேயே கூறிவிட்டார் ஆசிரியர். பரத்தையோடு கூடி வாழ்பவன் 'பரத்தன்' என்பது இலக்கிய மரபு. இதன்படி, உத்தமியான மாதவியோடு வாழ்ந்தாலும், ஊரார் பார்வையில் கோவலன் பரத்தனே.

பரத்தையர் வீதியில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட கோவலனுக்கு, பரத்தர்கள் தானே நண்பர்களாக

இருக்க முடியும்? சூழ்நிலைக்கேற்ற நண்பர்கள் தானே வாய்ப்பார்கள். ஆகவே, பரத்தரொடு திரிந்தான் என்பதைக் காட்டி, கோவலனைக் காமுகன் ஆக்கிவிட முடியாது. கோவலன் பரத்தரோடு வீதியில் திரிந்தது விழா நாட்களில்தான். நாள்தோறும் அல்ல! அவனுடன் திரிந்தோர் பரத்தையர் மட்டுமல்லர்; யாழிசைத்துப் பாடும் பாணர்களுந்தான்!

''பரத்தரொடு திரிதரு கோவலன்'' என்றதன்றி, ''பரத்தையரொடு திரிதரு கோவலன்'' என்று இளங்கோவடிகள் கூறவில்லை. புகார் நகரத்து வீதிகளில் உலாவும் கோவலனோடு ஒரு 'பரத்தை'யையும் காட்டுகின்றார் ஆசிரியர். அவள் மூன்றுவது ஒருத்தி அல்லள்; பத்தினிக்குரிய நெறியோடு கோவலன் ஒருவனையே நேசித்து வாழும் மாதவிதான். ஆம்,

**''காதற் கொழுநனைப் பிரிந்து அலர்எய்தா**
**மாதர்க் கொடுங்குழை மாதவி தன்னொடு**
**... ... ... ... ... ... ...**
**திரிதரு மரபிற் கோவலன்...''**

—சிலம்பு 1 5; *189, 90, 201.*

என்னும் வரிகளில், வேறெந்தப் பரத்தையையும் தீண்டாமல், அவளுடன் தெருவில் அலையாமல், பத்தினிக்குரிய நெறிகளைக் கடைப்பிடித்து, பத்தினியாகவே வாழ்கின்றாளே, அந்த மாதவியுடன்தான் கோவலன் விழாக் கோலம் காண வீதிகளில் நடமாடுகின்றான்.

காப்பிய நாயகியின் நாயகனான கோவலனும் இந்திர விழாவை அனுபவிக்கிறான் என்பதனை நினைப்பூட்டவே, மாதவியோடு கோவலனை புகார் நகரத்து வீதிகளிலே கற்பனையாக நடமாடவிடுகிறார் இளங்கோ. இது தானே நாடக அழகு! இதைக் காட்டி, கோவலனைக் காமுகன் என்பது பொருந்தாக் கூற்றாகும்.

காதற் கடிதம்

யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உருத்ததன் விளைவாக மாதவியைப் பிரிந்த கோவலன், கண்ணகியின் வீடுநோக்கிச் சென்று கொண்டிருக்கிறான். தன்னைப் பிரிந்த கோவலன், இன்னொரு பரத்தையின் இல்லத்துக்குத்தான் செல்வானென்று தவறாக எண்ணிவிடுகின்றாள் மாதவி. காமுகர் நிலையும் அதுதானே !

கோவலனிடம் குறைகாணும் இன்றைய புலவர் சிலரைப் போல, மாதவி நல்லாளும் தன் காதலனைச் சரியாகத் தெரிந்து வைத்திருக்கவில்லை. அதனால், மற்றொரு பரத்தையின் மனைபுகு முன்பே கோவலனைத் திரும்பவும் அடைவதற்கு முயற்சி எடுத்து, வயந்தமாலையின் மூலம் "காதற் கடிதம்" அனுப்புகின்றாள்.

> **"மன்னுயிர் எல்லாம் மகிழ்துணை புணர்க்கும்
> இன்இள வேனில் இளவர சாளன்;
> அந்திப் போதகத்து அரும்பிடர்த் தோன்றிய
> திங்கட் செல்வனும் செவ்வியன் அல்லன்;
> புணர்ந்த மாக்கள் பொழுதிடைப் படுப்பினும்,
> தணந்த மாக்கள் தம்துணை மறப்பினும்,
> நறுமபூ வாளியின் நல்உயிர் கோடல்
> இறும்பூது அன்று; இஃது அறிந்தீமின்' என,
> எண்எண் கலையும் இசைந்து உடன்போக;
> பண்ணும் திறனும் புறங்கூறு நாவில்
> தளைவாய் அவிழ்ந்த தனிப்படு காமத்து
> விளையா மழலையின் விரித்து உரை எழுதி"**
>
> —சிலம்பு : 8; 56—67.

இப்படி, கோவலனுக்குக் கடிதம் அனுப்பினாள் கலையரசி மாதவி. மாதவியின் கடிதம் காதற்சுவை நிறைந்ததாகும். ஆடல்—பாடல் கலைகளில் தேர்ந்த ஒரு கலைமகள், அக்கலைகளில் திறனும் ஆர்வமும்

உடைய கலைஞனுக்கு எழுதிய கடிதம் என்பதனை நினைவில் கொண்டால், கடிதத்தில் காதல் மணப்பது இயற்கை என்பது புலப்படும்.

மற்று, இன்னொரு பரத்தையின் இல்லத்தில் புகுந்துவிடுவானோ என்னும் தவறான ஐயத்தின் பேரில் எழுதிய கடிதமாதலால், தன்னுடன் ஊடிய காதலனுக்கு திரும்பவும் தான் கூடுவதற்கான உணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கடிதம் எழுதியது வாழ்க்கைக் கலையில் மாதவிக்கிருந்த திறனை வெளிப்படுத்துவதாகும். இது, கோவலனுடைய காம வாழ்க்கையைப் புலப்படுத்துவ தாகாது.

## கலையும் காதலும்

வயந்தமாலை தந்த மாதவியின் கடிதத்தை வாங்க மறுக்கும் கோவலன், அவளுடன் தான் கூடி வாழ்ந்த காலத்தில், அவள் தன்னிடம் காட்டிய சாகசங்களை எல்லாம் கூறி, அவளைப் பழிக்கின்றான்:

**"திலகமும் அளகமும் சிறுகருஞ் சிலையும்,**
**குவளையும் குமிழும் கொவ்வையும் கொண்ட**
**மாதர்வாள் முகத்து, மதைஇய நோக்கமொடு**
**காதலின் தோன்றிய கண் கூடு வரியும்;**
**புயல்சுமந்து வருந்திப் பொழிகதிர் மதியத்து**
**கயல்உலாய்த் திரிதரும் காமர் செவ்வியிற்;**
**பாகுபொதி பவளம் திறந்து நிலாஉதவிய**
**நாகுஇள முத்தின் நகைநலம் காட்டி,**
**"வருக" என வந்து, "போக"எனப் போகிய**
**கருநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்;**
**அந்தி—மாலை வந்ததற்கு இரங்கி,**
**சிந்தைநோய் கூரும் எம்சிறுமை நோக்கி;**
**கிளிபுரை கிளவியும் மடஅன நடையும்**

களிமயில் சாயலும் கரந்தனள் ஆகி,
செருவேல் நெடுங்கண் சிலதியர் கோலத்து
ஒருதனி வந்த உள்வரி ஆடலும்;

சிலம்புவாய் புலம்பவும் மேகலை ஆர்ப்பவும்
கலம்பெறு நுசுப்பினள் காதல் நோக்கமொடு
திறத்துவேறு ஆயஎன் சிறுமை நோக்கியும்
புறத்து நின்று ஆடிய புன்புற வரியும்;

கோதையும் குழலும் தாதுசேர் அளகமும்
ஒருகாழ் முத்தமும் திருமுலைத் தடமும்
மின்இடை வருத்த நல்-நுதல் தோன்றி,
சிறுகுறுந் தொழிலியர் மறுமொழி உய்ப்ப,
புணர்ச்சிஉட் பொதிந்த கலாம்தரு கிளவியின்
இருபுற மொழிப்பொருள் கேட்டனள் ஆகி,
தளர்ந்த சாயல், தகைமென் கூந்தல்
கிளர்ந்துவேறு ஆகிய கிளர்வரிக் கோலமும்;

பிரிந்துஉறை காலத்துப் பரிந்தனள் ஆகி,
என்உறு கிளைகட்குத் தன்உறு துயரம்
தேர்ந்துதேர்ந்து உரைத்த தேர்ச்சி வரி; அன்றியும்,

வண்டுஅலர் கோதை மாலையுள் மயங்கிக்
கண்டவர்க்கு உரைத்த காட்சி வரியும்;

அடுத்துஅடுத்து அவர்முன் மயங்கிய மயக்கம்
எடுத்துஅவள் தீர்த்த எடுத்துக்கோள் வரியும்;

ஆடல் மகளே ஆதலின், ஆயிழை !
பாடு பெற்றன அப்பைந்தொடி தனக்கு..."

—சிலம்பு : 8; 74—110.

என்னும் வரிகளில், மாதவி கடந்து போன நாட்களில் தன்னை மயக்கிய விதங்களை எலாம் வருணித்து, "இனியும் மயக்க முடியாது" என்று கூறி, அவள் அனுப்பிய கடிதத்தை வாங்க மறுத்து விடுகிறான். இங்கும் காம

வெறி காட்சியளிக்கவில்லை; கலைவெறியே காட்சி தருகிறது.

பள்ளியறைக் கூத்து !

பரத்தையர் பலவிதமானவர். இதனை, அகப் பொருள் இலக்கியங்களில் அறிகிறோம். எந்தப் பரத் தையிடமும் காமுகன் காமம் துய்க்கலாம். அத்தகைய காமப் பரத்தை யல்லள் மாதவி. அதனாற்றான், "பரத்தை மகளே யாதலின்" என்று கூறாமல், "ஆடல் மகளே யாதலின்" எனக் கூறினான் கோவலன்.

இதற்கு முன் சோழ மன்னன் அரசவையிலும், பின் னர் இந்திர விழாவில் பொதுமக்கள் முன்பும் பலவகைக் கூத்துக்களை மாதவி ஆடக்கண்டு மகிழ்ந்தோம். பள்ளியறையில் காதலன் களிக்க ஆடும் எண்வகை வரிக்கூத்தும் உண்டாம். அந்தக் கூத்துக்களையும் மாதவி அறிவாள். தன் இல்லத்தில்—பள்ளி அறையில் ஆடும் எண்வகைக் கூத்தும் உண்டென்பதை நாமும் அறிய வேண்டுமல்லவா! அதற்காகவே, கோவலன் வாயிலாக இங்கு அந்த எண்வகை வரிக்கூத்தை விரித் துக் கூறுகிறார் இளங்கோ.

ஆடற்கலையில் தேர்ச்சிபெற்ற ஒருத்தி, பள்ளி அறையில் தன் காதலனை, அந்தக் கலைத்திறங் காட் டியே மகிழ்வித்தாள் என்பது குறையாகாது. அந்த எண்வகை வரிக்கூத்தை அனுபவித்த காரணத்தால் கோவலனும் காமவெறியனாகிவிட மாட்டான். மேலே காட்டிய வரிகளால் உணர்த்தப்படுவது, காமவெறி யன்று; கலைவெறி! காமவெறியை எவ்விடமும் பெற லாம். ஆனால், எண்வகை வரிக்கூத்தால் வெளிப்படும் கலைவெறியை மாதவி போன்றவள் தானே தரமுடியும்? கோவலன் போன்ற கலைஞன்தானே அதனை அனுபவிக் கவும் முடியும். ஆகவே, கோவலன் காமவெறியன்

என்பதற்கு இதுவும் சரியான சான்ருகாது. வேண்டுமாளுல், கலை வெறியன் என்று கூறலாம்.

கோவலனுக்கும் மாதவிக்கும் உள்ள தொடர்பை ஒரு காளைக்கும் கன்னிக்குமுள்ள தொடர்பாக மட்டுமல்லாமல், ஒரு கலைஞனுக்கும் கலைமகளுக்கும் உள்ள தொடர்பாகவும் கருதினுல், அவர்களுடைய வாழ்க்கையிலுள்ள புனிதத்தன்மை நன்கு புலப்படும். கலாதேவியை மாதவி வடிவத்தில் கண்டு, அவளுக்கு அடிமைப்பட்டான் கோவலன். அப்படியே, தன்னை வாழவைத்த கலாவல்லியைக் கோவலன் வடிவில் கண்டு வழிபட்டாள் மாதவி. இத்தகைய உயர்ந்த நிலையிலுள்ள பாத்திரங்கள் வேறெந்தக் காப்பியத்திலும் இல்லை.

## தந்தையும் மகளும்

கோவலன் தன்னைப் பிரிந்த பின்னர் வேருெரு பரத்தையின் இல்லத்திற்குத்தான் செல்வான் என்றெண்ணி, தான் அனுப்பிய கடிதத்தை வாங்கக் கோவலன் மறுத்த பின்னர், "மாலை வாரா ராயினும் காலை காண்குவம்" என்று தோழியிடம் கூறுகின்ருள். ஆம்; வேருெரு பரத்தையிடமும் கோவலன் காம இன்பம் துய்க்கலாம். தான் தந்த கலையின்பத்தைத் துய்க்க முடியாது; தன்னிடம் வெளிப்பட்ட நல்ல பத்தினிக்குரிய பண்புகளையும் காண முடியாது என்ற துணிவு மாதவிக்கு. அதனுற்ருன், ஒரு இரவு கழிந்த பின்னர், விடிந்ததும் தன் வீடுதேடி ஓடிவருவான் என்று நம்பி, "காலை காண்குவம்" என்னும் துணிவு பெறுகிருள்.

பின்னர், தன் காதலன் பத்தினிக் கண்ணகியுடன் கூடிப் பாண்டி நாடு செல்கிருன் என்ற செய்தி கேட்டு மன அதிர்ச்சி அடைகிருள் மாதவி. பரத்தை இல்லம் புகுந்து அவளிடமே அடிமைப்பட்ட பரத்தன் எவனும்

திரும்பவும் பத்தினியின்பால் அன்பு செலுத்திய செய்தியை அவள் கேட்டிருக்கமாட்டாள். அதனால், கோவலனின் மனமாற்றம் அவளுக்கு வியப்பைத் தந்தது. பரத்தர்களின் குணக்கேடுகளுக்கு விலக்கானவன் கோவலன். இதனை, மாதவி இப்போதுதான் முழு அளவில் உணர்கிறாள். அதனால், அவன் தன் காதலன் என்பதை மறந்து, வழிபடத்தக்க தந்தை என்று கொண்டு மீண்டும் கடிதம் எழுதுகின்றாள் :

**அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்;**
**வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;**
**குரவர்பணி அன்றியும், குலப்பிறப் பாட்டியோடு,**
**இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது,**
**கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்;**
**பொய்தீர் காட்சிப் புரையோய், போற்றி !**

—சிலம்பு : *13; 83–92.*

இது, மாதவி இரண்டாவது எழுதிய கடிதத்தின் வாசகம். இதில், 'அடிகள் !' என்று விளித்து, 'உம் திருவடியில் வீழ்கின்றேன்' என்று கூறி, விழுந்தவள் மீண்டும் எழுந்து, தன் இரு கரங்களையும் சிரமேற் கூப்பி, 'பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி' என்று கோவலனை வழிபடுகின்றாள். இங்கே, கோவலனிடமும் அதிசயமான மனமாற்றத்தைக் காண்கிறோம்.

## மனமாற்றம்

முன்னர், வயந்தமாலை கடிதம் கொண்டு வந்த போது மாதவியை ஆடல் மகளாக மட்டுமே நினைத்து, அவளைப் பழித்தவன், இப்போது, 'தன் தீதிலள்' என்று கூறி, 'என் தீது' என்கின்றான். அதாவது, "எனக்கு நேர்ந்த இன்னல்களுக்கு மாதவி காரணமல்லள்; என் தவறுகளே காரணம்" என்று பெருந்தன்மையுடன் ஏற்கிறான்.

மாதவியுடன் கூடிவாழ்ந்த நாட்களில் அவளுடைய ஒழுக்கத்தை எந்த அளவில் அவன் உணர்ந்திருந் தானே, அதைவிடப் பன்மடங்கு அவள் எழுதிய இரண்டாவது கடிதத்தின் வாயிலாக உணர்ந்து கொள் கிருன்.

ஒரு பரத்தையோடு வாழ்ந்து பின் சந்தர்ப்ப சூழ்நிலையால் அவளைப் பிரிந்த பரத்தன் ஒருவன் திரும் பவும் பத்தினியை அடைந்து புத்துணர்வு பெற்ற புது மையை முதன் முதலாகக் கோவலனிடமே கண்டாள் மாதவி. அதனுல், அவனைத் தன் தந்தையின் நிலையில் வைத்து இரண்டாவது கடிதம் எழுதினுள்.

கோவலனும், ஒருத்தனேடு கூடிவாழ்ந்த பரத்தை யானவள், அவன் வலுவில் பிரிந்து சென்ற பின்னரும் அவனுக்கே தன் நெஞ்சகத்தைக் கோயிலாக்கிய புது மையை முதன் முதலாக மாதவியிடமே காண்கின்ருன். அதனுல், அவளைத் தன் மகளாகவே நினைக்கின்ருன். மாதவி கோவலனுக்கு முதலில் எழுதிய கடிதம் காதலன் —காதலி தொடர்பைக் காட்டுவதாகும். இரண்டாவது எழுதிய கடிதம், தந்தை—மகள் தொடர்பைக் காட்டுவ தாகும்.

இதனுற்ருன், மாதவி தனக்கெழுதிய இரண்டாவது கடிதத்தை, அடித்தல்—திருத்தலின்றி, சேர்த்தல்— குறைத்தலின்றி, அப்படியே தன் தந்தைக்கு அனுப்பி வைக்கின்ருன் கோவலன். இவ்வளவு உயர்ந்த பண் பாடுடையவனையா காமுகன் என்று கூறுவது ?

## உரையாசிரியர் தவறு

'கானல்வரி'ப் பாடலின் விளைவாக மாதவியைப் பிரிந்த கோவலன், பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண் டும் கண்ணகியை அடைகின்ருன். அடைந்தவன் தன் பத்தினியின் வாடிய மேனி வருத்தங் கண்டு,

"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலந்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு"
—சிலம்பு 1 9; 69-71.

என்று கூறுகின்றான். இதற்கு, "எல்லாப் பொருளிலும் பொய்யை மெய்யாகப் பொருந்துவித் தொழுகும் பொய்த்தியொடு கூடி ஆடிய ஒழுக்கத்தினானே நம் குலத்திலுள்ளவர் தேடித்தந்த மிக்க நிதிக்குன்றமெல்லாம் அவள் பொருட்டால் தொலைந்தன. அதனால் இல்லாமை உண்டாதல் நாணைத் தருகின்றது" என்று பொருள் கூறுகின்றார் அடியார்க்கு நல்லார். இது பிழையாகும்.

தன் கணவன் கைப்பொருளெல்லாம் தொலைத்து வறுமையுற்றதற்கு வருந்துகின்றான் என்று நினைத்த கண்ணகி, "சிலம்புள கொள்ளுங்கள்" என்று கூறி, அவனுடைய வருத்தந் தவிர்க்க முயல்கின்றாள். "சிலம்புள கொண்ம்" என்னும் சொற்றொடர்க்கு,

"மாதவிக்குக் கொடுக்கும் பொருட் குறைபாட்டால் தளர்ந்து கூறினானகக் கருதி ஒளிபொருந்திய முகத்தே நலம் பொருந்திய சிறிய முறுவலை விளைத்து, இன்னும் சிலம்பு ஓர் இணையுள: அவற்றைக் கொண்மின் என்றாள் என்க"

என்று பொருள் கூறுகின்றார் அடியார்க்கு நல்லார். இந்தப் பொருளை உண்மையெனக் கொண்டு, "கோவலன் திரும்பவும் கண்ணகி வீட்டிற்கு வரக் காரணம், மேலும் மாதவிக்குக் கொடுப்பதற்குப் பொருள் பெற்றுச் செல்வதற்காகவே" என்று கற்பித்துக்கொண்டு, கோவலன் காமுகன் என்று உரைக்கின்றனர்.

இதுவும் பொருந்தாக் கூற்றேயாம். "சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடி குலந்தரு வான்பொருள்

குன்றங்தொலைந்த இலம்பாடு நாணுத்தரும் எனக்கு" என்று கோவலன் கூறுவதனால், அவன் மாதவியை முற்றிலும் வெறுத்து விட்டான் என்பதும், அவளோடு கடந்த காலத்தில் கூடி வாழ்ந்ததற்காக வெட்கப்படுகிறான் என்பதும் புலனாகின்றன.

மாதவி விஷயத்தில் கோவலன் மனமாற்றம் அடைந்துவிட்டான் என்பதை கண்ணகி உணராமலில்லை. உணர்ந்து, மேலும் வாணியம் செய்வதற்கு மூலதனமாக இருக்கும் பொருட்டுத் தன் காற்சிலம்பைக் கொடுக்க இசைந்தாள்.

"மாதவியோடு கூடிவாழ்ந்த செயல் எனக்கு வெட்கத்தைத் தருகிறது" என்று கோவலன் கூறியபின்னும், அவன் மாதவிக்குக் கொடுக்கும் பொருட்டாகவே தன்னிடம் பொருள் கோருகிறான் என்று கண்ணகி எண்ணுவாளானால், அவள் படுமூடப் பெண்ணாகத்தான் இருக்க முடியும். ஆனால், அத்தகைய மூடப்பெண் அல்லள் கண்ணகி.

## பள்ளியறை புகுந்ததேன் ?

மாதவியைப் பிரிந்து கண்ணகியின் மனைக்கு வந்த கோவலன், நேரே பள்ளி அறைக்குள் புகுந்து, அங்கு ஓரிரவைக் கழித்த பின்னர், மறுநாள் பொழுது புலர்வதற்கு முன்பு அவளைக் கூட்டிக்கொண்டு புகார் நகரைவிட்டுப் புறப்படுகிறான். "பல ஆண்டுகள் தன் வீட்டைப் பிரிந்த கோவலன், மீண்டும் அதனை அடைந்தபோது, நேராகப் பள்ளி அறைக்குச் செல்வானேன் ?" என்றுவினா எழுப்பி, "அப்படிச் சென்றது கண்ணகியிடம் சிற்றின்பம் துய்க்கும் காம வெறியால் தான்" என்று விடையளிக்கின்றனர் சிலர். இப்படிப் பொருள் கொள்வது அறியாமை மட்டும் ஆகாது; ஒழுக்கக் கேடுமாகும்.

கோவலன் நேரே பள்ளி அறைக்குள் புகக் காரணம், பெற்றோரும் சுற்றத்தாரும் தன்னைக் கண்டுவிடுவார்களோ என்ற கவலைதான். மாதவியோடு கூடி வாழ்ந்த செயலுக்கு வெட்கப்படுமளவுக்கு மனமாற்றம் அடைந்து விட்டானுதலால், பெற்றோரையும் சுற்றத்தாரையும் காண்பதற்கு அவன் வெட்கப்படுவது இயற்கை. பெற்றோரும் சுற்றத்தாரும் மட்டுமல்லாமல், ஊரிலுள்ளோரும் தன்னைக் காணக் கூடாதென்ற எண்ணத்தினுல்தான் பொழுது புலர்வதற்கு முன் இருள் சூழ்ந்த நேரத்தில் கண்ணகியுடன் நகரை விட்டுப் புறப்படுகின்றான். இதனை,

> **"வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குல்**
> **கனைசுடர் கால்சியா முன்"**
>
> —சிலம்பு: 8; வெண்பா.

என அறிவிக்கின்றார் ஆசிரியர் இளங்கோ.

கண்ணகியின் மனையில் ஓர் இரவு தங்கினுன் என்பதாலேயே அவளோடு உடல் இன்பம் துய்த்தான் என்று எண்ணுவதற்கு இல்லை. அதற்கான மனநிலையிலும் அப்போது கோவலன் இல்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் தன் வீடுவந்த கோவலன்,

> **"அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய**
> **மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்**
> **கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்**
> **மங்கல அணியிற் பிறிதணி மகிழாள்**
> **கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்**
> **திங்கள் வாள்முகம் சிறுவியர்ப்பு இரியச்**
> **செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்**
> **பவள வாள்நுதல் திலகம் இழப்ப,**
> **மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்**
> **கையறு நெஞ்சத்துக் கண்ணகி......"**

என்று இளங்கோவடிகள் வருணித்தாரே, அதே நிலை யில்தான் தன் காதலியைக் காணகின்றான். அதனால், மனத்தில் மகிழ்ச்சி இல்லை கோவலனுக்கு. கண்ண கியோ, அணிகலன்களின்றி, அலங்காரமின்றி, சோகமே வடிவான நிலையில் கோவலனுக்குக் காட்சி அளிக்கிறாள். இந்த நிலையில் காதலர் இருவரும் சிற் றின்பத்தில் கவனம் செலுத்தச் சந்தர்ப்பமேது?

## மண்மகளும் வருந்தினாள்!

புகாரிலிருந்து வெளியேறி, மதுரை நோக்கிப் பய ணம் செய்யும்போதும், கண்ணகியின் தோற்றத்தில் மாறுதலில்லை. ஆம்; புகார் நகரில் கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில், எந்த அலங்கோலத்தில் இருந் தாளோ, அதே நிலைதான் வழிப் பயணத்தின்போதும்!

வழிப்பயணத்தில் ஒரு நாள் இரவில் நிலவொளி யில் கண்ணகியை நிறுத்தி, அவளுடைய அவலக் கோலத்தை நம்முடைய அகக் கண்களுக்குக் காட்சிப் படுத்துகின்றார் ஆசிரியர் இளங்கோ. அணிகலன்களை யும், அலங்காரங்களையும் துறந்தவளாக உள்ள கண் ணகி மீது வெண்ணிலவு பொழிகின்றதாம். அந்த நிலவு பத்தினிக் கண்ணகியின் பரிதாப நிலையைக் காண்பவர் களுக்கெல்லாம் காட்சிப் படுத்துகின்றது. மண்மகளும் காண்கின்றாள். அப்படிக் கண்டகாலை, அந்த மண் மகள் கண்ணகியின் நிலைக்கு இரங்கிப் பின்வருமாறு கூறுகின்றாள் :

**"தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும்**
**சீரிள வனமுலை சேரா தொழியவும்**
**தாதுசேர் கழுநீர்த் தண்பூம் பிணையல்**
**போதுசேர் பூங்குழல் பொருந்தா தொழியவும்**
**பைந்தளிர் ஆரமொடு பல்பூங் குறுமுறி**
**செந்தளிர் மேனி சேரா தொழியவும்,**

மலயத் தோங்கி; மதுரையின் வளர்ந்து
புலவர் நாவில் பொருந்திய தென்றலொடு
பால்நிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய,
"வேனிற் றிங்களும் வேண்டுதி … …"

—சிலம்பு : 13; 19-28.

இது, நிலமகள் கூற்றாகக் கவிஞர் தரும் கற்பனைச் செய்தியாகும். இதற்குக் கீழ்வருமாறு பொருள் கூறுகின்றார் அடியார்க்கு நல்லார்:

"பார்மகள், பாவாய்! முன்னாள் நின் கொழுநன் நின்னைப் பிரிந்த இளவேனிற் காலத்தில் வான்மீன் ஒழுங்கு போன்ற முத்து வடமும் சந்தனக் குழம்பும் சீர்மைபொருந்திய அழகிய இளைய முலைகளைச் சேரப்பெறுவாய் ஒழியவும், பலவகைப் பூந்தாதும், கழுநீர்ப் பிணையலும், முல்லைமலர் பற்றறுத பூங் குழலில் பொருந்தாவாய் ஒழியவும், அழகிய சந்தனத் தளிரோடே பல பூக்களின் இதழும் சிவந்த தளிர்போலும் மேனியைச் சேரப்பெறுவாய் ஒழியவும், மலையத்தே முளைத்து மதுரையிலே வளர்ந்து புலவர் நாவிலே பூத்து நிலைபெற்ற தென்றலோடே வெள்ளிய ஒளியை உடைய திங்களின் கதிர் நின்மெய்யிற் சொரிதல் ஒழியவும் வேண்டி இப்போது வேனிற்றிங்கள் இவ்வெண் கதிரை'நின் மெய்யிற் சொரியவும் விரும்பியிருப்பையே; இரா என்று சொல்லி வருந்தி நெட்டுயிர்ப்புக் கொண்டு அவள் துயின்றபின் என்க."

## புணர்ச்சி யின்மை

புகாரில் கணவனோடு கூடியிருந்த காலத்தில் தான் வாழ்ந்த மாளிகையின் மேற்புறத்திலுள்ள வேயா மாடத்தில் வேனிற் பருவத்து இரவுக் காலங்களில், நிலவொளியிலே கோவலனுடன் கண்ணகி இன்பந்துய்த்தாள்; அவள் தன்னைப் பிரிந்த பின்னர், அந்த நிலவொளியைக்கூட அனுபவிக்க விரும்பாதவளாய்,வேயா

மாடம் செல்வதையே மறந்து வாழ்ந்தாள். இப்போது கணவனைக் கைப்பிடித்து வழிநடக்குங்கால், இது காறும் அவள் திருமேனியைத் தீண்டாதிருந்த நில வொளி, இப்பொழுது மீண்டும் தீண்டுவதைக் கண்ட நிலமகள், இன்னுங்கூட நிலவின்பத்தை அனுபவிக்கும் நிலையில் கண்ணகியின் மனோநிலை இல்லை என்பதை உணர்ந்து வருந்துகின்றாள்.

கவிஞர் இளங்கோ, நிலமகளின்மேல் ஏற்றி இந்தச் செய்தியை இங்கு கூறுவதற்குக் காரணம் சொல்லப் புகுந்த அடியார்க்கு நல்லார்,

> "இத்துணையும் இவள் புணர்ச்சி இன்பம் பெறுமை நோக்கி பார்மகள் இரங்கிக் கூறினாள். என்னை புணர்ச்சி யில்லாதவாறெனின், மாதவி யோடு புலந்து போதுதலானும், மதுரைக்குச் சேறற்கு ஒருப்பட்ட நெஞ்சினனாதலானும், மேற் கவுந்தியடிகளுடன் வழிச் சேரலானும் யாண்டும் மெய்யுறன் மாத்திரமல்லது புணர்ச்சி இல்லென உணர்க."

என்று குறிப்பிடுகின்றார். மேலே தந்த செய்திகளை எல்லாம் சிந்தையிற் கொண்டால், புகார் நகரில் ஒரு இரவு கண்ணகியின் இல்லத்தில் தங்கியபோதோ, பின்னர், அவளுடன் மதுரை நோக்கி வழி நடந்தபோதோ, கோவலன், கண்ணகியோடு உடலின்பந் துய்க்கவில்லை என்பதை உறுதியாக நம்பலாம். கோவலனைக் காமுகனாகக் காண்போர் இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

## பரத்தையர் வீதியிலே...

கண்ணகியைக் கைபிடித்து மதுரை நகர் அடைந்த கோவலன், புறஞ்சேரியில் கவுந்தியடிகளின் காவலில் அவளை வைத்துவிட்டு, மதுரை நகருக்குள் புகுந்து ஊர்

முழுவதையும் கண்டு திரும்புகின்ருன். ஆம்; கோவலனை ஊர் சுற்றவைத்து, மதுரை நகரின் அழகையும், அமைப்பையும், செல்வச் சிறப்பையும், மதுரை மன்னனின் செங்கோல் பண்பையும் நமக்குக் காட்டுகின்ருர் இளங்கோவடிகள். கோவலனை நகர்வலஞ் செய்ய வைத்திராவிடில், நாமும் சிலப்பதிகாரக் காலத்தின் மதுரையைக் கண்டிருக்க முடியாதல்லவா?

'ஊர்காண் காதை'யில் மதுரை வீதிகளிலே நடமாடும் கோவலன், பொதுமகளிர் பொழுதுபோக்கும் காட்சிகளையும், காமக் கிழத்தியர்—நாடகக் கணிகையர் வாழும் வீதிகளையும் காண்கின்ருன். இதனைக் காட்டி, கோவலன் காமுகன்தான் எனச் சாதிக்கின்றனர் சிலர். இதுவும் ஆழ்ந்த ஆராய்ச்சியில்லாத குறையின் விளைவாகும்.

கோவலன் மதுரை நகருள் புகுந்ததற்குக் காரணம், கண்ணகியை அடைக்கலம் வைப்பதற்கு ஏற்ற மனையைத் தேடுவதற்கேயாகும். இதனை,

> "தொன்னகர் மருங்கின் மன்னர் பின்ஞேர்க்கு
> என்னிலை உணர்த்தி யான்வருங் காறும்
> பாதக் காப்பினள் பைந்தொடி......"
>
> —சிலம்பு : 14; 21—23.

என்று கவுந்தியடிகளிடம் கோவலன் கூறுவதனுல் அறிகின்ருேம். மதுரையுள் புகுமுன்பு,

> "கோலோச்சும் மன்னர்க்கு அடுத்த நிலையிலுள்ள செல்வக் குடியினரான வணிகர்களைக் கண்டு அவர்களுக்கு எனது நிலையைக் கூறி, என் கண்ணகியைத் தங்க வைப்பதற்கான இடத்தைத் தேடி வருமளவும் என் பத்தினி தங்கள் பாதுகாப்பில் இருக்கட்டும்."

என்று கவுந்தியடிகளிடம் கூறி, அதற்கு அடிகள் சம்மதித்த பின்னரே கோவலன் மதுரை நகருக்குள் புகுகின்றுன். இதனுல், பரத்தை இன்பந் துய்க்கும் எண்ணத்துடன் கோவலன் மதுரைக்குள் புகவில்லே என்பது புலனுகும்.

பொதுமகளிர், காமக்கிழத்தியர், நாடகக் கணிகையர் ஆகியோர் ஆடிப்பாடிக் கூத்தடிக்கும் இடங்களே யும், அவர்கள் தங்கி வாழும் வீதிகளேயும் கோவலன் காண்கின்றுனே, அதற்குக் காரணம் என்ன? - என்று கேட்கலாம். கோவலன், பரத்தையர் வாழும் வீதிகளே யும் அவர்கள் வாழ்க்கை நிலேயினேயும் கண்டதோடு; அங்காடி வீதி, இரத்தின வீதி, பொன் வீதி, அறுவை வீதி ஆகியவற்றையும் கூடத்தான் காண்கின்றுன். அதற்கும் உள்நோக்கம் உண்டோ? மதுரை நகரம் முழுவதையுமே முன்னர் காணுதவனுதலால் இப்போது கண்டு மகிழ்கின்றுன். நமக்குக் காட்டுவதற்காகவும் கோவலனேக் காண வைக்கின்றுர் இளங்கோ.

## பொய்யனே ?

இங்கு ஒரு விஷயத்தை விளக்கியாக வேண்டும், மன்னர் பின்னேரான தன் குலத்து வணிகர்களேக் கண்டு வருவதாகக் கவுந்தியடிகளிடம் சொல்லிவிட்டுப் போன கோவலன், அப்படி எவரையும் காணுதவனுகவே திரும்புகிருன். இதனுல், கவுந்தியடிகளிடம் பொய்க் காரணம் கூறிவிட்டு, பரத்தையின்பம் துய்க்கும் பொருட்டு கோவலன் மதுரைக்குள் புகுந்தான் என்று பழி சொல்லப்படுகிறது. பல ஆண்டுகள் பிரிந்திருந்த தன் உரிமைப் பத்தினியைத் திரும்பவும் அடைந்த கோவலன், அவளிடமே மீண்டும் இன்பம் துய்க்காத மனேநிலேயில் இருக்கின்றுனென்பதை மேலே கண்டோம். அதை ஏற்பதானுல், மதுரைப் பரத்தையரிடம்

இன்பம் துய்த்தான் என்று கூறுவது பாத்திரத்தின் பண்பறிந்து பேசும் பேச்சாகாது.

வணிகக் குடியினரில் எவரையும் காணுமல் திரும்பினுனென்ருல், அதற்குக் காரணம் நாண உணர்ச்சிதான். சிலம்பு விற்கச் சென்றபோதுகூட, வாணிப முறைப்படிப் பார்த்தால், கோவலன், வணிகரீடம் சென்று விற்க முயன்றிருக்க வேண்டும். அப்படிச் செய்யாததற்குக் காரணம், தன்னுடைய அவல நிலையைத் தன் குலத்து வணிகர் அறிவதை அவன் விரும்பாததுதான். இது ஒன்றே கோவலனுடைய உள்ளத்தின் உயர்வைக் காட்டும்.

## பழித்தது எப்போது?

மாதவியின்பால் வெறுப்புக் கொண்ட கோவலன், "மாயப் பொய் பலகூட்டும் மாயத்தாள்" என்றும், "சலம்புணர் கொள்கைச் சலதி" என்றும் அவளை இழித்தும் பழித்தும் பேசி, அவளுடைய ஒழுக்கத்திற்குக் களங்கம் கற்பிக்கிருன். இதனை எடுத்துக் காட்டி, கோவலன் சபலபுத்தி படைத்தவன் என்று அவனைச் சாடுகின்றனர் சிலர்.

கோவலன் மாதவியைப் பழித்தது அவளோடு ஊடியிருந்த காலத்திலாகும். யாழிசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்து உறுத்ததால் களங்கமற்ற மாதவி மேல் களங்கங் கற்பிக்கும் சிறுதவறைச் செய்கின்ருன். ஆயினும், அந்தணனுன கவுசிகன் மூலம் இரண்டாவது கடிதத்தை மாதவி அனுப்பியபோது, அவன் பழைய ஊடல் நிலையில் இல்லை. மாதவியிடம் அவன் முன்பு கொண்டிருந்த பாசம் திரும்பவும் தலைகாட்டுகின்றது. "தன் தீதிலள், என் தீதே" என்று கூறி, அவளுக்குத் தான் கற்பித்த களங்கத்தைப் போக்குகின்ருன். ஆம்; "நீர் கிழித்த வடுப்போல

மாறுமே சீரொழுகு சான்ருேர் சினம்" என்னும் வாக்கை மெய்ப்பிக்கின்ருன்.

உண்மைக் காரணமின்றி மாதவியைச் சந்தேகித்த தனுலேயே கோவலன் பாத்திரத்தின் பண்பு பழுதாகி விடுமா? காப்பியத் தலைவியின் தலைவனுக இருப்பதற் குரிய தகுதியை அவன் இழந்து விடுவானு? ஒரு போதும் இல்லை. இதற்கு, கம்ப ராமாயணத்திலிருந் தும் சான்று காட்டலாம். இராமன், மானுக வந்த மாரீசனைக் கொன்றபோது, அவன், 'இலக்குமணு' என்று ஓலமிட்டு மாள்கிருன். அவனது வஞ்சகக் குரல் கேட்ட சீதை, தன் தலைவனுக்கு ஏதோ கேடு நேர்ந்த தென்றெண்ணி, அவனைக் காப்பதற்கு ஓடுமாறு இலக்குமணனைத் தூண்டுகின்ருள். இலக்குமணன், "அது அண்ணல் குரலன்று; மாரீசனின் மாயக் குரல்" என்று கூறி, காவலைத் துறந்து செல்ல மறுக்கிருன்.

அந்த நிலையில், பொறுமை இழந்த சீதை, இலட்சு மணன் மனம் புண்படும் நிலையில் பேசுகிருள். அவனை, அண்ணனிடம் நல்லெண்ண மில்லாதவனுக, நன்றி கெட்டவனுக வருணிக்கின்ருள். இதனுல், காப்பியத் தலைவனை இராமனுக்குத் தலைவியாக இருக்கும் தகுதியை சீதை இழந்து விட்டாள் என்று யாரும் சொல்லவில்லை. கோவலன் மட்டும் மாதவியைப் பழித்த ஒன்றிற்காக காப்பியத் தலைவிக்குரிய தலைவனுக இருக் கும் தகுதியை இழந்து விடுவானு?

இதுகாறும் எடுத்துக் காட்டிய சான்றுகளால் கோவலன் காமவெறி காரணமாக கண்ணகியை மறந்து மாதவியின் மனையில் தங்கிவிட்டான் என்ற வாதம் பொய் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மற்று, கோவலன் மாதவியைக் காதலித்ததற்கான காரணம் வேறு என்பதைப் புலப்படுத்தி, அதை யும் எடுத்துக் காட்டியிருக்கிருேம்.

மாதவியைக் காண்பதற்கு முன்பு கோவலனுக்கு இருந்த கலை ஆர்வம், சோழமன்னன் அவையில் நடந்த மாதவியின் நடன அரங்கேற்றத்தைக் கண்ட பின்னர், ஒரு இரவு அவளுடைய இல்லத்தில் தங்கிக் கழித்த பின்னர் கலை வெறியாகவே மாறி விட்டது. ஆகவே, "கோவலனுடைய அவல வாழ்வுக்குக் காரணம் காமமா, கலையா ?" என்ற வினா எழுந்தால், "கலைதான்" என்று விடையளிப்பது காப்பியம் தந்த கவிஞனின் கருத்துக்கு இயைந்ததாக இருக்கும். கலை ஆர்வம் வெறியாக வளரக்கூடாதுதான். வளர்ந்தால், அதன் விளைவு தீமைதான். அதனால், கோவலனுக் கிருந்த கலை வெறியை ஒரு குறையாகக் கொள்ளலாம். அந்த வகையில் கோவலன் குறையுடையவனே. ஆனால், குற்றவாளி அல்லன். மனத்தாலும் பிறிதொருவருக்குத் தீமை நினையாத பெருங்குணத்தன். அறிவு முதிர்ந்த அந்தணனாகிய மாடலன்,

" **இம்மைச் செய்தன யானறி நல்வினை,**
**உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்**
**திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது**
**விருத்த கோபால நீ—** "

என்று கூறுகின்றானே—அதாவது, "கோவல! யான் அறிந்து இந்தப் பிறவியில் நீ நல்வினைகளையே ஆற்றி யிருக்கின்றாய். கடந்த பிறவியில் நீ செய்த தீவினை ஏதேனும் இருக்கலாம். அதனால், உன் பத்தினியுடன் நாடு பெயர்ந்து நலிவுற நேர்ந்தது" என்கிறானே அது ஒன்றே கோவலன் நற்குணத்திற்குச் சான்றாகும்.

காப்பியம் முழுதையும் கருத்தூன்றிப் படித்தால் மாடலன் கூற்று முற்றிலும் உண்மை என்பது புலனாகும். ஆனால், தன்பாலும் சில குறைகள் உண்டு என்பதை மிக்க பெருந்தன்மையுடன் கோவலன் ஒப்புக் கொள்ளுகின்றான். சிலம்பு விற்கும் பொருட்டுச் செல்ல

மாதரியின் இல்லத்தில் கண்ணகியிடம் விடை பெறுங் கால்,

> " வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
> குறுமொழிக் கோட்டி. நெடுநகை புக்குப்,
> பொச்சாப் புண்டு, பொருளுரை யாளர்
> நச்சுக் கொன்றேற்கு நன்னெறி யுண்டோ ?"
>
> —சிலம்பு. 16; 63—66.

என்னும் வரிகளில், நடனக் கணிகையின் வீட்டில் நிலையாகத் தங்கி வாழ்ந்ததால், வறுமொழியாளரும் வம்பப் பரத்தரும் அன்றி, நல்லோரிணக்க மில்லாமல் போன குறையை நினைந்து வருந்துகின்றான். பொருளறிவு படைத்தோருடன் கலந்து வாழாத குறையை நினைந்து கலங்குகின்றான். இன்னும்,

> " இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
> சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்
> வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கு ஈண்டு
> ' எழுக ' என எழுந்தாய், என்செய்தனை !"
>
> —சிலம்பு; 16; 67—70.

என்கின்றான் கோவலன்.

இதனால், பெற்றோர் அருகிலிருந்து அவர்களுக்குப் பணி புரியாத குறையை உணர்ந்து கண்கலங்கி விம்முகின்றான். தனக்கு வாழ்க்கைப்பட்ட கண்ணகி நல்லாள் வாழ்வாங்கு வாழத் தான் துணை நில்லாமல் போனதை நினைந்து துயரப்படுகின்றான்—என்பதனை அறிகின்றோம்.

ஆம்; கண்ணகியை கோவலன் கடைசி முறையாகக் காண்கின்றானதலால், தன்னால் அவளுக்கு நேர்ந்த துன்பத்திற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்பான் போலப் பேசுகின்றான். பெற்றோர்க்கு தான் செலுத்த வேண்டிய மன்னிப்புக் காணிக்கையையும் கண்ணகி

யிடமே வழங்கி விடுகின்றான். இங்கு கோவலனிடம் நாம் காணும் பெருந்தன்மை "கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே" என்னும் நீதி மொழியையே நமக்கு நினைப்பூட்டுகின்றது.

இதுகாறும் கூறியவற்றால்; கோவலனைப்பற்றிக் கூறப்பட்ட குறைகளை ஆராய்ந்து, அவற்றிற்கான காரணங்களைத் தெரிந்துணர்ந்த எவரும், அவனைக் குறைத்துப் பேசமாட்டார்கள் என்பதனை அறிந்தோம். பாத்திரப் படைப்பில், கோவலனை மிகத் திறம்படக் கையாண்டிருக்கிறார் சிலப்பதிகார ஆசிரியர். இனி, கோவலன் பாத்திரத்தை ஆசிரியர் இளங்கோ உருவகப் படுத்தி யிருக்கும் அற்புதத்தையும் ஒரு பார்வை பார்த்து அனுபவித்து விட்டு, இந்த ஆராய்ச்சியை முடிப்போம்.

சிலப்பதிகாரக் காலத்தில், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வருணப் பாகுபாடு நடைமுறையி லிருந்தது. அதன்படி, மூன்றாவதாகச் சொல்லப்பட்ட வணிக வருணத்தைச் சார்ந்தவனாவான் கோவலன். ஆனால், முதல் மூன்று வருணத்துக்கும் உரிய பண்புகள் அனைத்திற்கும் அவனைப் பாத்திர மாக்கி யுள்ளார் இளங்கோவடிகள்.

அந்தணர் என்போர் வேதமொழிபயின்ற வேதியரா வர். கோவலன், வடமொழி அறிந்தவன் என்பதனை முன்பே கண்டோம். அத்துடன் அந்தணர்க்குரிய பண்பையும் பெற்றிருந்தான் என்கிறார் இளங்கோ.

அந்தணர் பண்புக்கு இலக்கணம் சொன்ன வள்ளுவப் பெருந்தகை,

> **" அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிர்க்கும்**
> **செந்தண்மை பூண்டு ஒழுகலான் "**

என்று கூறினார்.

இந்தப் பண்புக்கேற்ப எல்லா உயிர்களிடத்தும் செந்தண்மை பூண்டு ஒழுகிய அந்தணனுகவே கோவலனைக் காட்டுகின்ருர் இளங்கோ. முதியவளொருத்தியின் மகனைப் பூதத்திடமிருந்து காத்து அவள் கண்ணீரைத் துடைக்க முயன்றதாலும்; கணவனைப் பிரிந்து வருந்திய பார்ப்பினிக்குப் பொருள் கொடுத்து, வடதிசைப் பெயர்ந்து சென்ற அவனைத் திரும்ப அழைத்து அவளோடு சேர்த்துவைத்ததாலும் கோவலன் கொண்டிருந்த செந்தண்மைப் பண்பு நன்கு புலனுகின்றது.

மதுரை நோக்கி வழி நடந்தகாலை வம்பப் பரத்தனும் பரத்தையும் கண்ணகி—கோவலரைப் பழித்துரைத்தபோது, சினங்கொண்ட கவுந்தியடிகள் "நீங்கள் நரிகளாகப் போக" எனச் சபித்தார். அது கண்டு மனம் வருந்திய கோவலன், அவர்களை மன்னித்து, சாபமகல வரந்தருமாறு கவுந்தியடிகளை வேண்டினுன்!

இந்தச் செய்திகளெல்லாம் கோவலனுடைய அந்தண்மையை உறுதிப்படுத்துவனவாகும்.

மாசாத்துவான் மகன் கோவலன், அரச வருணத்திற்குரிய மறப்பண்பையும் பெற்றிருந்தான். தனக்கு மாதவியிடத்துப் பிறந்த மணிமேகலைக்குப் பெயர் சூட்டுவிழா நடத்தியபோது தானம் வாங்க வந்த முதிய மறையோன் ஒருவன் மதயானையின் துதிக்கையில் அகப்பட்டு அலறியபோது, தன்னுயிரைத் துச்சமென மதித்து, அவன் உயிரைக் காக்கும் பொருட்டு மதயானையை அடக்கினுன். இது வணிக வருணத்தவரிடம் காண இயலாத துணிவான மறத்தன்மையாகும்.

### வள்ளண்மை

கோவலன், தான் பிறந்த வணிக வருணத்துக்குரிய வாணிபத் தொழிலை மறந்தவனே. அதனை

மறைப்பதற்கில்லை. மறைக்கவும் தேவையில்லை. ஆனால், வணிகருக்குரிய அறத்தைக் கைவிட்டானில்லை. அதாவது, வாணிபஞ் செய்து பொருளை ஈட்டுவது வணிகர் தொழில். ஈட்டிய பொருளை பிறருக்கு வழங்கு வது வணிகர் அறம். முன்னதான ஈட்டுந் தொழிலைத் துறந்தானாயினும், பிறர்க்கு வழங்கும் அறத்தினை மறந்தானில்லை. கோவலன் வறுமையுறக் காரணம், நடனக் கணிகையான மாதவிக்காக செலவழித்த தன்று. வாணிபத்தில் ஈடுபட்டுப் பொருளைத் திரட்டா மலே, பெற்றோர் தந்த பெரும் பொருளை பிறர்க்கு வழங்கி வாழ்ந்ததுதான். இதனால், அறத்தைப் பொறுத்தவரையில் கோவலன் வணிகனாகவே வாழ்ந் தான் என்பது புலனாகும்.

இப்படி, செந்தண்மை பூண்டொழுகிய அந்தணனா கவும், அரசருக்குரிய மறத்தன்மை வெளிப்பட வாழ்ந்த மறவனாகவும், வணிகருக்குரிய கொடைக்குணத்தைக் கடைப்பிடித்த வணிகனாகவும் வாழ்ந்த சிறப்பைக் கோவலனிடம் காட்டுகின்றார் ஆசிரியர் இளங்கோ. இதனை நான் சொன்னால் போதுமா ? அறிவிற் சிறந்த அந்தண முதியோனான மாடலனும் கூறுகின்றான், கேட்போம் :

**மாடலின் கூற்று**

வறுமையால் ஏக்கத்துடன் வந்தவர்க்கெல்லாம் பொருளை வாரி வழங்கிய கோவலனின் வணிகத் தன்மையைக் கூறுங்கால்,

> **"ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து,**
> **நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ !"**

என்றும்,

**"சுற்றத் தார்க்கும் தொடர்புறு கிளைகட்கும்**
**பற்றிய கிளைஞரின் பசிப்பிணி அறுத்து,**
**பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்!"**

என்கின்றான் மாடலன்.

கோவலனிடம் வெளிப்பட்ட அரச வருணத்துக்குரிய மறத்தன்மையையுங் கூறுங்கால்,

**"பொய்பொரு முடங்குகை வெண்கோட்டு அடங்கி**
**மைஇருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்**
**பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்**
**கடக்களிறு அடக்கிய கருணை மறவ!"**

என்று பாடுவதால் அறிகின்றோம்.

கோவலன், அந்தணர்க்குரிய பண்புகள் நிறைந்த ஞானியாக மாறிய நிலையை, மாதவி கோவலனுக்கு எழுதிய இரண்டாவது கடிதத்தில்,

**"அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்"**

என்று தொடங்கி,

**"பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி"**

என்று முடிப்பதனால் அறிகின்றோம்.

**மதுரையில் குடிபுக...**

கோவலன் புகார் நகரை விட்டுப் பெயர்ந்தபோது, திரும்பவும் தான் பிறந்த நாட்டுக்கு வருவதில்லை என்ற முடிவோடு—அதாவது, பாண்டி நாட்டிலேயே தங்கி விடுவதென்ற உறுதியோடு புறப்பட்டான். இல்லையேல், கண்ணகியையும் உடன் அழைத்துச் செல்லக் காரணமில்லை. தொல்காப்பியத்தில் ஆடவர்க்குப் பல பிரிவுகள் சொல்லப்படுகின்றன. அவற்றுள் ஒன்று,

பொருள் பற்றிய பிரிவு—அதாவது, பொருள் தேடும் குறிக்கோளுடன் நாடுவிட்டு நாடு செல்லும் போது ஆடவர் தம் மனேவியை அழைத்துச் செல்வதில்லே யென்று பொருள் இலக்கணம் கூறுகின்றது. இதனே, "முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லே" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் அறிகிருேம். இதற்கு "முந்நீர் வழக்கம் என்பது பெண்ணுேடு செல்லத்தகாத ஓதல், தூது, பொருள் என்னும் மூன்று நீர்மையான செலவு," எனப் பொருள் கூறுகின்ருர் நச்சினுர்க்கினியர். இந்த வாழ்க்கை இலக்கண மரபுக்கு மாருக, தன் கற்பரசியான கண்ணகியை சோழ நாட்டிலிருந்து பாண்டி நாட்டுக்கு அழைத்துச் சென்ருன் கோவலன். ஆம்; பொருள் தேடும் பொருட்டாக! இதற்குக் காரணம், பாண்டி நாட்டிலேயே தங்கி வாழ அவன் முடிவு செய்திருந்ததுதான். இல்லேயேல், மண்மகள் அறியாத வண்ணச் சீறடிபடைத்த கண்ணகியை வழி நடைத் துன்பத்திற்காளாக்க அவன் எண்ணியிருக்க மாட்டான்.

இப்படி, வாழ்வாங்கு வாழ்ந்த நாட்டில் வறுமை யுற்றபின் நடமாடக் கூடாதென்று நினேத்த தன்மானியான கோவலன், சிலப்பதிகாரக் காப்பியத்தின் தலேவிக்குரிய தலேவனுக இருக்க முற்றிலும் தகுதி படைத்தவனுவான். வரிசைக் கிரமமாக பல பெண்களே மணந்த சிந்தாமணிக் காப்பியத் தலேவனே விடவும் சிறந்த பாத்திரமாவான் கோவலன். அப்படி இருந்தும், காப்பியத்திற்கே அவனேத் தலேவனுக்கி விடாமல், காப்பியத் தலேவிக்குரிய தலேவனுகவே கோவலனேப் படைத்துள்ளார் ஆசிரியர் இளங்கோ. வாழ்க, சிலப்பதிகாரம் !

---

இன்ப நிலையம்

மயிலாப்பூர் : : சென்னை-4

Printed at Jeevan Press, Madras-5